
# ஸ்ரீ குமரகுருபரா



தொகுதி - 9 பகுதி - 11

ஆவணி - 1 17—8—87

சிவ சிவ

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொள் நகையினர் வாய்ச்சேரா — தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை உடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

குற்றமற்ற கல்வியானது, நுண்ணறிவு மிக்கவரிடத்தே யன்றி, மிக்க நகைப்புடைய விளையாட்டில் பொழுது போக்குவா ரிடத்தில் வந்து சேராது. எதுபோல எனில் தீண்டி வருத்தும் தெய்வமும் ஆண்வடிவம் கொள்ள விரும்பும் படியான பெண்வடிவமுடைத் தெனினும் பேட்டினிடத்தே பெண்ணின்பம் கொள்ளப்படாததைப் போல் என்பதாம்.

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர் ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான் சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபரர் நெறிவிளக்கம்
3 அறிவிப்பு
4 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
5 காளமேகமும் கவிதைத்தாகமும்
6 சிவபோகசாரமும் சொக்கநாத வெண்பாவும்
7 திருச்சிராப்பள்ளியில் இன்னிசைத் திருமுறைவிழா
8 திருச்சதகமும் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும்
9 நூல் நிறை
10 இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்
11 ஞானமிர்தம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் நிறை[illegible]கை
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர்

"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான்

## சுவாமிகள் அவர்கள்

உமையம்மையின் திருநயனங்கள் கருங்குவளை மலர் போன்றவை. அந்த நயனங்களின் எழிலுக்கு ஈடுஇணை கிடையாது என்றாலும்,

பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்புவ துவமை

என்ற இலக்கணப்படி நிறப்பண்பால் உமையம்மையின் கண்களுக்குக் கருங்குவளையை உவமையாகக் கூறலாம். "ஒப்புமை தோன்ற" என்றதால் ஒப்புமை வருமாறு கூறல் புலவனின் திறன் எனக் கோடல் தகும்.

கருங்குவளைமலர்போன்ற உமையம்மையின் கண்கள் செங்குவளை மலராகி விட்டனவே! என வியக்கிறார் ஸ்ரீ சுவாமிகள். கண்கள் சிவத்தலுக்குப் பனுவற் புலவோர் மூன்று காரணங்களைக் கூறுவார்கள், மிகுநீராடல், மிகு

புணர்வு, கள்ளுண்ணல் என்பன அவை. உமையின் கருங்குவளைக் கண்கள் செங்குவளையாயின என முதலிற் கூறினல் பிழையான பொருள் தருமே எனக் கருதிய அருளாளர் காரணத்தை முதலிற் கூறிக் காரியத்தைப் பின்னர்க் கூறுகிறுர்.

சிவபெருமான் கங்கையைப் பார்த்ததினுலே உமையம்மைக்குக் கோபம் வந்தது. அதனுல் அவளின் கருங்குவளைக் கண்கள் செங்குவளையாயின. கங்கையைச் சிவன் மணந்த செய்தி அவளுக்குப் பழைய செய்திதானே? பின் ஏன் கோபம் வரவேண்டும்? என வினவலாம்.

ஸ்ரீ சுவாமிகள், உமையம்மையின் அப்புலவி எவ்வளவு நுணுக்கமானதோ, அவ்வளவு நுணுக்கமாகவே நமக்கு விடை தருகிருர்கள்.

"கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள்"

என்பது அவ்விடை. சிவன் கங்கையைப் பார்த்தான் என்பதில் அவள் கோபப்பட்டாளில்லை, "கண்மலர் சாத்தியதால்" அவள் சினம் கொண்டாள்.

"பார்த்தல்" என்ற சொல்லைக் காட்டிலும் மிக அழுத்தமான சொல் "நோக்குதல்" என்பது நோக்குதலாவது ஒரு குறிப்புடையராகக் காண்டல். அதனினும் மிகுந்த பொருளழுத்தம் உடையது "கண்மலர் சாத்தல்" என்பது. மலர்சாத்தல், ஆராதனை நிகழ்ச்சி. அத்தகு நிலையில் சிவ பெருமான் கங்கைக்குக் கண்மலர் சாத்தினுன். சிருங்காரக் குறிப்பு மிகுதி தோன்ற நோக்கினுன் என்பது அதன் நயம்.

சிவனுக்கு மூன்று திருநயனங்கள். இடப்பாகம் கொண்டவள் உமையம்மை. இந்நிலையில் கண்மலர் சாத்தலில் உமையவளும் உடனுகிருள். எனவே அவள் சினக்கிருள் என்பதும் மற்ருெரு கருத்து.

இது என்ன வேடிக்கையாயிருக்கிறதே என ஸ்ரீ சுவாமிகள் அதிசயிக்கிறார்கள்.

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே?

என்றருளுகிறார்கள். செங்குவளை பூத்தாள் என்றதனால் கருங்குவளையாம் நிலையில் போதாயிருந்தது என்பது போந்த கருத்தாகும் அரும்பு போது, மலர் என்பன மூன்று நிலைகள். நீலநயனங்கள் கூர்ந்துநோக்கின; போது போல. கோபச் செவ்விழிகள் விரிந்திருந்தன, மலர் போல. இந்த மாற்றமும் ஸ்ரீ சுவாமிகள் வியப்புக்கு ஒரு காரணமாக அமைகிறது.

புலவி, ஊடல், துனி என்பவற்றுள் முன்னிரண்டும் தேறுதல் உடையன, தீருதல் உடையன. அதனாற்றான், புலவி நுணுக்கம் என்றும், உப்பமைந்தற்றாற் புலவி என்றும், ஊடுதல் காமத்திற்கின்பம் என்றும் தெய்வப் புலவர் தெளிய உரைத்தார்.

புலவிக் காலத்தும் ஊடற் காலத்தும் தலைவியர்க்குச் சினம் தோன்றலுண்டு. ஆனால் பசலை பூத்தலில்லை. பசலை என்னும் தேமல் தலைவனைப் பிரிந்த தலைவியர்க்கே வருவது.

உமையம்மை சிவனைப் பிரியவில்லை என்பது மட்டுமன்று, ஒரு பாகமாக விளங்குகின்றாள். அவளுக்குப் பிரிவுப் பசலை வர வாய்ப்பே இல்லை. ஆனால் உமையம்மை தீராப்பசலை கொண்டுள்ளாள். இது ஏன்? என்று ஒரு வினாவுடனேயே கவிதையை நிறைவு செய்கிறார்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே - எங்கோமான்
பங்குற்றும் தீரா பசப்பு

என்பது அப்பாடலின் முழுவடிவம் ஆகும்.

கங்கைக்குக் கண்மலர் சாத்தியதினால், ஒருபாகமாக உளள் ஆயினும் பிரிந்த மன உணர்வால், கணவனைப் பிரிந்தார்க்கு உளதாகும் பசலை தோன்றிற்று. அஃது தீராமைக்குக் கூறிய காரணத்தைத் சிலேடை வகையால் பொருள் கொள்ள வேண்டும். பசலை, பச்சைத்தன்மை எனும் பொருள்கள் உடைய சொல் பசப்பு என்னும் சொல். (மழுப்புதல் என்பது உலக வழக்குப் பொருள்; புலனெறி வழக்கன்று) அவள் பச்சை நாயகி எனவே அவள் பசப்பு, தீராப்பசப்பாகிறது.

இத்திருப் பாடலுள் இரண்டாமடியின்கண் தனிச் சொல்லாய் வரும் "எங்கோமான்" என்பது இடைநிலைப் பொருட்டீபகமாகும். எங்கோமான் கங்கைக்குக் கண்மலர் சாத்த என்றும், எங்கோமான் பங்குற்றும் என்றும் முன்னும் பின்னும் அத்தீபகச் சொல் இணைந்து பொருள் தருகிறது. இடைநிலைப் பொருள் பரம்பொருளாகவே அமைய அருளிய சிறப்பு நினைந்து நினைந்து இன்புறத் தக்கதாகும்.

உமையம்மையின் ஊடல் திறத்தை,

அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை - பெருமான்
அணியாகம் ஆரத் தழுவினாள் தான்முன்
தணியாத ஊடல் தணிந்து

என்னும் தண்டியலங்காரச் செய்யுளாலும் அறிக.

சிதம்பரச் செய்யுட் கோவையின் இருபத்து நான்காம் செய்யுளாகிய "கங்கைக்குக் கண்மலர் சாத்த" என்னும் செய்யுளின் கீழ் "இது மூன்றடியாய் இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று ஒரு விகற்பத்தால் வந்தமையால் ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா" என்னும் செய்யுளிலக்கணக் குறிப்பு உள்ளது.

குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகியவற்றுக்கு உதாரணச் செய்யுட்கள் அருளிய ஸ்ரீ சுவாமிகள் இத்திருப் பாடலையும், இதற்கு அடுத்த "கம்பக்கரடக் களிற்றின்" என்னும் திருப்பாடலையும் நேரிசைச் சிந்தியல் வெண்பாவுக்குக் காட்டுக்களாக அருளியுள்ளார்கள்.

தனிச்சொல் உடையது நேரிசை என்றும், "தனிச் சொல் இன்றி நடப்பின் அஃது இன்னிசைதுன்னும்" என்றும் வெண்பா இலக்கணம் கூறுங்கால் கூறப்பெற்றது. சிந்தியல் வெண்பாக்கட்கும் அஃதொக்கும்.

வெண்பாவின் சீர், தளை இலக்கணங்களே சிந்தியல் வெண்பாக்கட்கும் உரியன வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளைகளுமன்றிப் பிறதளைகள் விரவா என்பது இவ்வகைக்கும் உரிய முக்கிய குறிப்பாகும்.

> நேரிசை இன்னிசை போலநடந்து
> அடி மூன்றின் வந்தால்
> நேரிசை இன்னிசைச் சிந்தியல் ஆகும்

என்று யாப்பருங்கலக் காரிகை கூறும். எனவே மூன்றடி களால் அமைவது இப்பாடல் என உணர்தல் தகும்.

"கங்கைக்கு" எனத் தொடங்கும் பாடல் "பசப்பு" என்று முடிந்துள்ளது. அது பிறப்பு என்னும் வாய்பாடு ஈற்றடி சிந்தடி.

கங், செங், எங், பங் என ஓரெதுகையே பெற்றமை யால் ஒருவிகற்பம் ஆகிறது. இரண்டாமடியில் எங்கோமான் எனத் தனிச்சொல் பெற்று வந்தமையால் நேரிசையாகிறது.

— சிவ சிவ

# எப்படி வாழவேண்டும்?

நெல்லை சிவமணி புலவர் ம. சிவசம்பு எம். ஏ ,
பாளையங்கோட்டை

என் நண்பர் மகனுக்குத் திருமணம் ஆகி ஓர் ஆண்டு ஆகிவிட்டது. அதற்குள் அந்தக் குடும்பத்தில் பல மாறுதல் ஏற்பட்டுவிட்டன. முதலில் ஏற்பட்டது பொருளாதார வீழ்ச்சி. அதன் விளைவு தர்மங்கள் நின்றன. கற்ற கல்வியைப் பாதுகாக்காது கல்வியும் போய் அதனல் ஏற்படக்கூடிய பயனும் போய் விட்டது. பையனின் இளமை வலிமை, அழகு எல்லாம் போய்விட்டன. சுற்றத்தாரும் மற்றவர்களும் பெண்ணைக் குறைசொல்ல ஆரம்பித்தார்கள். பெண்வந்த நேரம் என்ருர்கள். சோதிடம் பார்க்கத் தொடங்கினர்கள். நண்பர் பெரிதும் வருந்தினர். இதற்கு அடிப்படைக் காரணத்தை ஆராயாது எங்கோ சுற்றிப் போய்க் கொண்டிருக்கிருர்களே என்று எனக்கு வருத்தம்.

அந்தப் பையனை அழைத்தேன். இவ்வளவுக்கும் காரணம் நீதான் என்று சொன்னேன். நான் என்ன செய்தேன் என்ருன்? திருமணம் ஆனபின் நீ என்ன செய்கிருய் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப்பார் புரியும் என்றேன். அவனல் புரிந்து கொள்ள முடியவில்லை. நானே கொஞ்சம் கோபத்துடன் சொன்னேன். திருமணத்திற்குப்பின் நீ சரியாக வியாபாரத்தைக் கவனிப்பதில்லை. உண்பதும் உறங்குவதும் இன்பம் துய்ப்பதும் ஆகிய இவற்றைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை. மிருக வாழ்க்கை வாழ்கிருய். அளவு கடந்த இன்ப உணர்வு உன் குடும்பத்தை இந்நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. நீ வியாபாரத்தைச் சரியாகக் கவனிக்காமையால் வியாபாரத்தில் நட்டம். உன் அப்பா தருமங்களை நிறுத்தினர். நீ நிறைய நூல்கள் படிப்பாயே! இப்போது எங்கே படிக்கிருய்? படிப்பதையே மறந்துவிட்டாய். உன் உடல் நலமும் கெட்டுவிட்டது. உன் மனைவியும் எலும்பும் தோலுமாக இருக்கிருள். முதலில் அவளைக் கொஞ்ச நாள் ஊருக்கு அனுப்பிவை. இல்லற இன்பத்தையும் அளவோடு அனுபவிக்க வேண்டும். இதை நான் சொல்லவில்லை. ஸ்ரீ குமரகுருபரர் சொல்லுகிருர். இப்பாடலை நாள்தோறும் படி. எப்படி வாழவேண்டும் என்பது புரியும் என்றேன்.

கருமம் சிதையாமே கல்வி கெடாமே
தருமமும் தாழ்வு படாமே - பெரிதுந்தம்
இன்னலமும் குன்ருமே ஏரிளங் கொம்பன்னர்
நன்னலம் துய்த்தல் நலம்.

நீதிநெறி விளக்கம் — 78

# ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
# 300 ஆவது ஆண்டுவிழா

## அறிவிப்பு

ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் சித்தாந்த பரமுத்தி எய்திய 300 ஆவது ஆண்டு மாகேஸ்வரபூஜைத் திருநாள் எதிர் வரும் விபவ ஆண்டு வைகாசித் திங்கள் அமரபட்சம் திருதியையில் வருகிறது. ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு நாளை மன்பதைகள் உய்யுமாறு பல்லாற்றானும் சிறப்புறச் செய்யும் வண்ணம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றியிருக்கிறார்கள்.

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஓதாதுணர்ந்த பெருஞானி என்பதும், தம் ஐந்தாம் அகவையில் செந்திற் கந்தன் திருவருளால் ஊமை நீங்கப்பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடியருளியவர்கள் என்பதும், மதுரையில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடுங்கால் அம்பிகையால் முத்துமாலையணிவிக்கப் பெற்றவர்கள் என்பதும், நீதிநெறி விளக்கம் என்னும் அரிய நூலினை அருளி அறந்தலை நிறுத்த அண்ணல் என்பதும், வேளூர்க்கந்தனுக்குச் சந்தச் செந்தமிழாக முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் இயற்றித் துதித்தவர்கள் என்பதும், சகலகலா வல்லி மாலை பாடிக் கலைமகள் அருளால் இந்துஸ்தானி மொழி கைவரப் பெற்று மொகலாய மன்னனிடம் சிங்கத்தின் மீதிவர்ந்து எழுந்தருளியவர்கள் என்பதும், வாரணாசியில் ஸ்ரீ குமாரசுவாமிமடம் நிறுவியவர்கள் என்பதும், அரிய பிரபந்த நூல்கள் பல அருளியவர்கள் என்பதும் இன்னோரன்ன செய்திகளும் தமிழுலகம் நன்கறியும்.

அத்தகு பேரருளாளரின் 300 ஆவது நினைவு நாளை விரிவாகவும் பயனுள்ள வகையிலும் கொண்டாடுவது நம் கடமை என்றால் மிகையில்லை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு (டாக்டர் உ. வே. சா. இயற்றிய அருஞ்சொற்பொருள், ஆய்வுரைகளுடன்) ஸ்ரீகாசிமடம்

நிதிய வெளியீடாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையால் வெளியிடப்பட உள்ளது. அச்சுப் பணிகள் தொடங்கி நடக்கின்றன.

பேரறிஞர்கள் அடங்கிய மலர் வெளியீட்டுக்குழு ஒன்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம் செயற்பட்டு வருகிறது. அக்குழுவின் விபரம் வருமாறு:

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அதிபர்
கயிலைமாமுனிவர்

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

—புரவலர்

செந்தமிழ்ச்செல்வர், கல்விக்காவலர்
வித்துவான். டாக்டர் திரு. ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டி. லிட்., அவர்கள்
நிறுவனர், செயலர், தாளாளர்,
ஸ்ரீ வெங்கடேசா கல்வி நிறுவனங்கள்,
பெங்களூர் —தலைவர்

பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ. அவர்கள்
சென்னை —பதிப்பாசிரியர்

பேராசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள்
திருச்சிற்றம்பலம் —உறுப்பினர்

டாக்டர் டி. பி. சித்தலிங்கையா எம். ஏ. பி. எச். டி., அவர்கள்
மதுரை —உறுப்பினர்

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள்
—உறுப்பினர்

பேராசிரியர் திரு. சா. ம. வேங்கடராமையா எம். ஏ., பி. ஓ. எஸ்.,
செயலர், தாளாளர், ஸ்ரீ காசிமடம் கல்வி நிறுவனங்கள்
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் —செயலர்

மேற்கண்ட குழு, ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவாக விரிவான ஆய்வு நூல் ஒன்று வெளியிடுவது என முடிவு செய்த வண்ணம் ஆய்வுக்கட்டுரைகள் எழுதக் கீழ்க்கண்ட அறிஞர்கள் இசைவு தெரிவித்து ஆய்வுப் பணிகள் செய்து வருகின்றனர்.

| ஆய்வறிஞர்கள் | தலைப்பு |
|---|---|
| 1. பேராசிரியர் திரு. மு. அருணாசலம் எம். ஏ, திருச்சிற்றம்பலம் | 1. Biography of Sri Kumaraguruparar 2. History of Kasi Mutt |
| 2. பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ. சென்னை | Kumara guruparar as a Literary Artist |
| 3. டாக்டர் டி. பி. சித்தலிங்கையா எம். ஏ. பி. எச்டி மதுரை | Kumaraguruparar as a Saiva Siddhanthin |
| 4. டாக்டர் சுப. அண்ணாமலை, எம். ஏ., பி. எச்டி., மதுரை | Kumaraguruparar as a Mystic |
| 5. டாக்டர் தெ. ஞானசுந்தரம் எம். ஏ., பி. எச்டி., சென்னை | Kumaraguruparar as a Humanist |
| 6. பேராசிரியர் கா. ம. வேங்கடராமையா எம். ஏ., பி. ஓ. எல்., திருப்பனந்தாள் | Kumaraguruparar as a Grammarian |
| 7. செந்தமிழ்ச் செல்வர், கல்விக்காவலர் வித்துவான் டாக்டர் ம. வெ. ஜெயராமன் எம். ஏ., டி. லிட்., பெங்களூர் | —ஸ்ரீ குமரகுருபரரின் சமுதாய நோக்கு |
| 8. பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் சிதம்பரம் | —கந்தர் கலிவெண்பா |
| 9. டாக்டர் க. த. திருநாவுக்கரசு எம். ஏ., பி. எச்டி., சென்னை | —நீதிநெறி விளக்கம் |

10. டாக்டர்
சொ. சொ. மீ. சுந்தரம்
எம். காம்., பி. எச்டி.,
மதுரை —மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

11. டாக்டர்
மா. இராமலிங்கம்
எம். ஏ., பி. எச்டி.,
திருச்சி —முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

12. வாகீச கலாநிதி
திரு.கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,
சென்னை —மதுரைக் கலம்பகம்

13. டாக்டர்
சொ. சிங்கார வேலன்
எம். ஏ., பி. எச்டி.,
மயிலாடுதுறை —காசிக் கலம்பகம்

14. டாக்டர்
கு. சுந்தரமூர்த்தி
எம். ஏ., பி. எச்டி.,
திருப்பனந்தாள் —ஸ்ரீகுமரகுருபரர் அருளிய மும்மணிக்கோவைகள்

15. டாக்டர்
பொன். கோதண்டராமன்
எம். ஏ., பி. எச்டி.,
சென்னை —சிதம்பரச் செய்யுட் கோவை

16 திரு. ம. வே. பசுபதி எம். ஏ
திருப்பனந்தாள் —ஸ்ரீகுமரகுருபரர் அருளிய திருவாரூர் நான்மணிமாலையும் சகலகலாவல்லி மாலையும்

17. டாக்டர்
இரா. செல்வக்கணபதி
எம். ஏ., பி. எச்டி.,
தருமபுரம் —மூன்று தனிப்பிரபந்தங்கள்

தமிழ், ஆங்கில ஆய்வுக்கட்டுரைகளடங்கிய இந்நூலின் அச்சுப் பணி நவம்பர்த்திங்களில் தொடங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள தமிழ்ச்சங்கங்கள் மன்றங்கள் சிவனடியார் திருக்கூட்டங்கள், சைவசித்தாந்தசபைகள் ஆத்திகக் குழுக்கள் முதலியன யாவும், ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவுத் திருநாளை மிகச்சிறப்பாக விழா எடுத்தும், விரிவுரைகள் நிகழ்த்தியும், திருவுருவப்படத்திறப்புச் செய்தும், பிரபந்தங்களை அகண்ட பாரயாணம் செய்வித்தும், பள்ளிச் சிறுவர்கட்குக் கந்தர்கலி வெண்பா, நீதிநெறி விளக்கம் சகலகலா வல்லி மாலை ஒப்புவித்தற் போட்டிகள் நிகழ்த்தியும் கொண்டாடும் என நம்பலாம்.

தமிழிலக்கியப் படைப்பாளிகளுக்கு 'அரசு விழா' எடுக்கும் ஒரு நன்மரபை நம்தமிழக அரசு கடைப்பிடித்து வருகிறது. அவ்வகையில் செய்குத் தம்பிப் பாவலர், வ.வே.சு ஐயர் போன்ற பலரின் விழாவையும் அரசுவிழாவாக எடுத்தது. பேரருளாளரும் சிற்றிலக்கிய வேந்தருமாகிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் 300ஆவது ஆண்டு விழாவைத் தமிழக அரசு கொண்டாடும் நல்வாய்ப்பை நழுவ விடாது என்றே கருதலாம்.

மன்றங்கள் சங்கங்கள், தம் பொருட் செலவிலேயே இம்முந் நூறுவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஸ்ரீகாசிமடம் அதிபர் கயிலைமா முனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள் இவ்விழாத் தொடர்பாக அருளும் செய்திகள் ஸ்ரீகுமரகுருபரர் இதழ்களில் வெளியிடப்பெற்று வரும்

"பாத்தொடுத் தெடுத்த பரஞ்சுடரை
நாத்தழும்பிருக்க ஏத்துமின் னீரே"

—காசிக்கலம்பகம்

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| | |
|---|---|
| திரு/திருமதி முன் இருப்பு | 26927—15 |
| கும்பகோணம் துர்க்காகுடில் அப்பு | 5—00 |
| திருவனந்தபுரம் K. E. மூர்த்தி | 5—00 |
| உக்கரை கைலாசம் | 5—00 |
| வெள்ளக் கோவில் சாமிநாதன் செட்டியார் | 5—00 |
| ஆக ரூ | 26947—15 |

| | |
|---|---|
| திருந்து தேவன்குடி ஸ்ரீ கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு | 90—00 |
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | 90—00 |
| பாணுதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | 75—00 |
| சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு | 68—50 |
| ஆக ரூ | 323—50 |


Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

ஸ்ரீ நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம்—608 001

உ

சிவ சிவ

மணிக்குடி ஸ்ரீ பிருகந்நாயகி சமேத ஸ்ரீ பஞ்சவர்ணேசுவர சுவாமி திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்திற்கு 12—7—87 - ஆம் நாள் எழுந்தருளிய திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் குருமகா சன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ
சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருமுன்னிலைக்குத்

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் மாணாக்கரும், பெங்களூர் ஸ்ரீ வெங்கடேசா கல்வி நிறுவனங்களின் நிறுவனர், செயலர், தாளாளரும் ஆகிய செந்தமிழ்ச் செல்வர், கல்விக்காவலர்

வித்துவான். டாக்டர்.
ம. வெ. ஜெயராமன் M. A., D. Lit.,
பணிந்தளித்த

# வரவேற்பிதழ்

அருளார் பெருமை மிகக்கொழிக்கும்
அருமைத் தருமைக் குருமணியே!
திருவார் செம்மைச் செந்தமிழும்
சீலம் ஞானம் இவைபலவும்
வருவார் பலர்க்கும் வழங்கியருள்
வள்ளல் பெரும எழுந்தருள்க!
மருவார் வண்ண மணிக்குடியின்
மண்ணும் கமழ எழுந்தருள்க! 1

257
12-8-87

சீதம் கொளுநல் திருத்தருமைத்
தேவே! ஞானச் சுடர்க்கொழுந்தே!
காதல் பெரிய புராணவுரை
கனியக் கனிய அருள்முதே!
போதம் பில்கும் சுடர்விழியே!
புகலி வேளூர் திருப்பனசை
ஓதும் இன்ன கோயில்பல
உவந்து புரப்போய் எழுந்தருள்க! 2

கல்விநிலையம் பல புரந்தும்
கற்றோர்க் கரிய விருதளித்தும்
எல்லை இல்லாச் சைவநெறி
எங்கும் பரவ நிறுமித்தும்
அல்லும் பகலும் சொக்கன்தாள்
அன்பே நிரம்பப் பூசிக்கும்
நல்லோர் துதிக்கும் நற்றவமே
ஞானக் கொழுந்தே எழுந்தருள்க! 3

பொன்னம் பலத்தான் திருப்பாதப்
புகழார் சிலம்பின் மணிவிளைந்த
கன்னல் செந்நெல் வயல்சூழ்ந்த
கவினுர் பெரிய மணிக்குடியின்
துன்னும் பெருமை மிகுவிக்கத்
தூயோய் இவண் இங் கெழுந்தருள்க!
மன்னும் சிவம்நெஞ் சமுழுந்துவிக்கும்
மாண்பார் மணியே எழுந்தருள்க. 4

பிறந்து வளர்ந்த திருதலத்தின்
பீடு பிறங்கச் செய்விக்கும்
சிறந்த குடநீ ராட்டுவிழாச்
செழிக்க வருகை புரிந்தருளும்
அறங்கள் பிறந்த திருத்தருமை
அருளின் ஆட்சிப் பேரரசே!
திறங்கள் மிக்க வரங்களினைச்
செழிக்க அருள எழுந்தருள்க. 5

பெங்களூர்
12—7—87

இன்னணம்
ம. வெ. ஜெயராமன்

உ

சிவ சிவ

மணிக்குடி ஸ்ரீ பிருகந்நாயகி சமேத ஸ்ரீ பஞ்சவர்ணேசுவர சுவாமி திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்திற்கு 12—7—87 - ஆம் நாள் எழுந்தருளிய

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர்

"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ

**காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

**திருமுன்னிலைக்குத்**

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் மாணாக்கரும், பெங்களூர் ஸ்ரீ வெங்கடேசா கல்வி நிறுவனங்களின் நிறுவனர், செயலர், தாளாளரும் ஆகிய

செந்தமிழ்ச்செல்வர், கல்விக்காவலர்

வித்துவான், டாக்டர். ம. வெ. ஜெயராமன் M. A., D. Lit.,

**பணிந்தளித்த**

# வரவேற்பிதழ்

ஈசனார் திருக்கோயில் எங்கெங் கிருந்தாலும்
இனிதுவழி பாடியற்றி
எளியோங்கள் நெஞ்சினில் பக்திக் கிலக்கணம்
இதுவெனக் காட்டுமழகே!
வாசமார் செந்தமிழ்க் கல்லூரி தன்னோடு
வண்குமர குருமுனிவரர்
வளர்பெயர் நிலைநிறகப் பலகல்வி நிறுவனம்
வைத்துப் புரக்குமமுதே!
தேசமே போற்றிடத் தீனருக் கமுதுநிதம்
திகட்டப் புகட்டுமருமைத்
திருவார்ந்த காசிமடம் தினமோங்க வழிசெய்யும்
தெளிவார்ந்த அருளாளரே!
நேசமே நிலைநிற்கும் நீடுபுகழ் அதிபரே!
நீண்முத்துக் குமாரமுனியே!
நிலையான மணிக்குடியின் நிசமான ஈசமான
நீஎழுந்தருள் செய்கவே.

தேவார ஒலிகெறிகள் தெருவெலாம் முழங்கவும்
திருக்கோயி லில்துலங்கவும்
திருமுறைப் பதிப்புகள் வழங்கவும் பலவான
திட்டங்கள் நிறைவேற்றிடும்
பாவாரப் போற்றவுயர் பண்பார்ந்த துறவரசு!
பதியெலாம் துதிசெய்திடப்
பனிமலைக் கயிலாயம் படர்ந்துவழி பாடுசெய்
பகர்கயிலை மாமுனிவரே!
ஏவார்ந்த பனைநகர் எழிலார்ந்த காசிமடத்து
ஏரார்ந்த பேரதிபரே!
எந்தையா ருடன்தாயும் மகிழ்ந்துகு லாவியே
இருந்ததித் தலமாதலால்
மாவார்ந்த இயற்கைவள மணிக்குடிச் சிற்றூரின்
மகிமை தழைத்தோங்கவே
மாண்பாள! நற்கரசி வாசியாம் எஜமான
மகிழ்ந்தெழுந் தருள்செய்கவே. 2

எங்களூர் இதுவெனினும் பெங்களூர் மேவியான்
இயல்கல்வி நிறுவனங்கள்
இயற்றிப் புரக்கிறேன் எனினுமென் தாய்வீடிங்
கிதுவேஉன் நிழலென்பதே
தங்கமே என்னுமனம் தாங்கிடும் அருளாள!
தயவார்ந்த சிந்தாமணீ!
தருவிலுயர் கற்பகத் தாருவே! காசிமடம்
தன்னிலுயர் தனியதிபரே!
பொங்குமுயர் நற்பெரிய நாயகியி னுடனுறைதல்
புரிபஞ்ச வர்ணேஸ்வரர்
பூரித் தருள்மழை பெய்திடும் திருக்கோயில்
புதுமைமிகு பொலிவு பெறவே
இங்குபல விஜயங்கள் இனிதே புரிந்தருள்செய்
இன்னருளின் எஜமானரே
எம்காசி வாசியாம் முத்துக் குமாரமுனி
எழுந்தருள் செய்திடுகவே. 3

பெங்களூர்
12—7—87

இன்னணம்
ம. வெ. ஜெயராமன்

# காளமேகமும் கவிதைத்தாகமும்

( தொடர்ச்சி )

ம. வே. பசுபதி

'வாதக்கா லாம்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிரும் புத்திரற்கு — மாதரையில்
வந்தவினை தீர்க்க வகையறியான் வேளூரான்
எந்தவினை தீர்ப்பான் இவன்'

என்று சிவனையே கேலி பேசுகிறான் இவன். இந்த வேடிக்கை வார்த்தைகளை ஆழமாகச் சிந்திக்கும் போது பக்தியைப் பழிக்க வில்லை; நடராஜ தத்துவத்தின் மகிமையையும் காக்கும்திருமாலின் கருணையையும் விநாயகனின் ஸ்வரூப லட்சணத்தையுமே இப்பாடல் பேசுகின்றது என்பது புலனாகும்.

சில நேரங்களில் வேடிக்கை வாதங்களில் எழுப்பப்படும் கேள்விகள் கேள்விகளாகவே நின்றுவிடுகின்றன.

சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி படைத்தார். அந்தத்திருவிளை யாடலின் இறுதியிலே [பெரியபுராணத்தில் வந்தாலும் இது இறைவனின் திருவிளையாடல் தானே] சிவன் அழைக்கச் சீராளன் ஓடிவந்தான். சீராளனின் கறி பூராவும் ஓரிடத்தில்இருந்திருந்தால் அவன் ஓர் உருவாகி ஓடிவந்தான் என்பது பொருந்தும். ஆனால் கதை அப்படி இல்லையே! காளமேகம் கேட்கிறான்.

சட்டியி லேபாதி சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் தில்பாதி இட்டிருக்கத் — திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வாறு? உரை.

எவ்வளவு கோணல்புத்தி பாருங்கள் இந்தக் கவியரசனுக்கு' இந்தப் பாடல்கூட நமக்கு நாத்திக வாதமாகப்படவில்லை. ஏனென்றால் 'திட்டமுடன் ஆடிவந்த சோணேசர், என்ற தொடரால் இறை

வனின் பேராற்றலைக் கோடி காட்டுகிறான். கேள்வி, கேள்வியாகவே இருந்தாலும், அவன் பக்தி நோக்கத்திற்குப் பாதகம் இல்லாமற் போகிறது.

அலங்காரத்திலே மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி அல்லது நிந்தாஸ்துதி என்று சொல்வார்கள். அவையெல்லாம் காளமேகப் புலவனுக்குத் தண்ணீர்பட்ட பாடு. முருகனின் பெருமையைப் பாராட்டத் தொடங்குகிறான் கவி காளமேகம். 'முருகன் பிச்சைக்காரனின் பிள்ளை. இவனுடைய அண்ணன் சப்பைக்காலும் பெரும் தொந்தியும் உள்ளவன். இவனின் ஆத்தாள் நீலி அதாவது நீலநிறமுடையவள் அல்லது எப்பொழுதும் ஏமாற்றும் அழுகை உடையவள். மாமன் திருட்டுப்பயல். இவையெல்லாம் ஆறுமுகனின் பெருமை என்று பாடுகிறான். அந்தக்குடும்பம் முழுவதையும் கேலி செய்து இது முருகனின் பெருமை என்று முடித்தால் நம்மால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்?

'அப்பன் இரந்துண்ணி; ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி — சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்: ஆறுமுகத் தானுக்குஇங்கு
எண்ணும் பெருமை இவை'

இவ்வளவு கேலி வார்த்தைகளாகச் சொன்னாலும் எல்லாமும் செல்லமாகச் சொன்ன வார்த்தைகளாகவே நமக்குப் படுகின்றன. உண்மையிலேயே கேலி செய்பவனாக இருந்தால் மாமனை ஒப்பரிய மாமன் என்று சொல்லுவான். அது மட்டுமல்லாமல் ஒரு முடிவைச் சொல்லுகிறேன். 'தத்துவத்தை மறுக்காத எந்தப் பிரத்யட்சவிமர்சனமும் கேலியாகாது.' இந்த உண்மையை நன்கு புரிந்துகொண்டு நன்றாகப் பயன்படுத்தி வெற்றிகண்ட கவிஞன் காளமேகம் மட்டும் தான் என்று கூறினாலும் தவறில்லை.

சமய மாற்றம் செய்து கொண்ட கவிஞன் என்பதால் இவனுடைய சில பாடல்களுக்கு வைணவ எதிர்ப்பாகப் பொருள் சொல்வது அனர்த்தமும் அபத்தமும் ஆகும். கவிஞனின் உள்ளம் அறிந்தே கவிதைகளுக்குப் பொருள்காண வேண்டும்.

சைவ, வைணவ பேதத்தை வெறுத்தவன் அல்லது அருவருத்தவன் காளமேகம். இந்தச் சண்டை கூடாது என்பது அவன் அபிலாஷை.

"சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவானேன் — ஓரங்கள்

வேண்டாம்: இதென்ன? விபரம் தெரியாதோ?
ஆண்டானும் தாதனுமா னல்!''

என்று ஒரு பாடல் பாடுகிருன். இப்பாடலின் முதல் மூன்றுவரி, தெளிவாக உள்ளது. சீரங்கத்தார் வைணவர்கள். திருவானைக் காவார் சைவர்கள். இவர்களுக்குள் யுத்தமனேபாவம் ஏன்? ஓரம் கூடாது; நியாயமற்ற செயல் கூடாது, என்கிருன். இந்த மூன்று அடிகளுக்கு மேல் வருகிறபகுதி கவிஞனின் சுபாவமாக இருக்கிற நையாண்டித்தனம். நையாண்டித்தனங்களைக் கொள்கைப் பிரகடன மாகக் கொள்ளக் கூடாது என்பது ஒருபக்கம் இருக்க அதிலும் நியாயம் இருப்பது ஆச்சர்யம் அளிக்கிறது.

ஆசிரியத் தொழில் செய்யும் ஒருவருக்கு நையாண்டி செய்யும் சுபாவம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் அந்தத் தொழிலையே — தனக்குச் சோறுபோடும் அதே தொழிலைக் கூட நையாண்டி செய்துகொண்டிருப்பார் 'ஆயிரம் கற்றும் கவி உளம் காண்கிலார்' என்றுசொல்லும் பாரதியின் மகாமந்திரத்தை ஜெபித்துக் கொண்ட பிறகே இத்தகைய பாடல்களுக்கு வியாக்யா னம் செய்யப் புறப்படவேண்டும்.

சைவர்களுககும் வைணவர்களுக்கும் ஏன் சண்டை வருகிறது? காளமேகம் கேலியாக ஒரு காரணம் சொல்லுகிருன். 'முதலாளிக் கும் தொழிலாளிக்கும் மனஸ்தாபம் வருவது சகஜம்தானே! என்கி ருன்

வைணவர் தன்னைச் தாஸன் என்று குறித்துக் கொள்வர். சைவர் தன்னை அடியவன் என்பார். அடியவர் என்ருல் ஆட் கொள்ளப் பெற்றவர்கள்: தாஸர்களுக்கு மேற்பட்டவர்கள். எனவே ஆண்டானுக்கும் தாசனுக்கும் சண்டை வருகிறது என்கிருன் காள மேகம். இத்துடனே அர்த்தம் பார்ப்பதை நிறுத்திவிட்டால் அவன் சைவர்களை உயர்த்தி வைணவர்களைத் தாழ்த்தியது போல் இருக்க லாம். ஆனல் சைவர்களை இவன் ஆண்டான் என்றுகுறிப்பிடுவதும் ஒரு கேலி வார்த்தைதான். இது நிதானமாகச் சிந்திப்பவர் களுக்குப் புரியும் ஏனென்ருல் அடியார் என்பதற்கும் தாஸன் என்பதற்கும் அதிகமான வித்யாசமில்லை. சிவனை 'ஆண்டான்' என்றும் திருமாலைத் 'தாஸன்' என்றும் சொல்லிப் பொருள் கொள்ளவும் முடியாது.

காளமேகத்தின் இந்தச் சமரச உள்ளத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் இன்னொரு பாடலையும் பார்க்கவேண்டும்.

ஒரு கதை போன்ற பாடல்
ஒரு வைணவர் கேள்வி கேட்டார்
'ஓய்! சைவரே! நீர் சிவனைத்தானே பரம்பொருள் என்கிறீர்'
'ஆமாம்' என்றார் சைவர்
'அப்படியென்றால் எனக்கொரு சந்தேகம்'
'கேளும்'
'திருமால் அண்டங்களை எல்லாம் உண்டபோது உங்கள் சிவ பெருமான் எங்கே இருந்தார்?

சைவர் சுதாரித்துக் கொண்டு பதில் சொன்னார். 'யானை கவளத்தை உருண்டைஉருண்டையாக உண்ணும்போது பாகன் மேலே இருந்ததைப் போல இருந்தார்' இந்தக் கருத்தமைந்த பாடலைக் கேளுங்கள்.

அருந்தினான் அண்டமெல்லாம் அன்றுமால் ஈசன்
இருந்தபடி ஏது? என்று இயம்பில் — பொருந்திப்
பரும்கவளம் யானை, கொளப் பாகன், அதன்மீதே
இருந்தபடி ஈசனிருந் தான்.

இந்தப்பாடல் திருமாலைக் கிண்டல் செய்தது தானே!
வசமாகச் சிக்கிக் கொண்டாயே! என்பீர்கள்.

கவிஞர்கள் ஏமாளிகள் அல்லர். உலக வழக்கங்களை உன்னிப்பாகக் கவனிக்கும் தனித்தன்மை இயல்பாகப் பெற்றவர்களே வெற்றிகரமான கவிஞர்களாய்ப் பரிணமிக்க முடியும். கவளம் என்பது, உருட்டிக் கொடுக்கும் உணவு. அதை யானைக்குக் கொடுக்கும் பொழுது பாகன் கீழேதான் இருப்பது வழக்கம். கோவில் யானையாக இருந்தால் — சேவார்த்திகள் சிறிதாக யானைக்கு ஏதாவது கொடுக்கும்போது பாகன் யானையின் மேலே இருப்பதுண்டு. அந்தச் சிற்றுணவுகளைக் கவளம் என்று சொல்லும் பழக்கமில்லை.

யானை கவளம் உண்ணும் போது பாகன் மேலே இருப்பான் என்று காளமேகம் தெரியாமல் புரியாமல் சொன்னானா? இல்லை. அவன் அறிந்துதான், தெரிந்துதான், புரிந்துதான், சொன்னான்.

மேம்போக்காகப் பார்க்கும் போது - பதப்பொருள் பார்க்கும் போது, கவிகாளமேகம் திருமாலைக் கேலி செய்தது போல இருக்கும். உண்மை அதுவன்று.

திருமால் உலகை உண்டது அவதாரத்தில் நிகழ்த்தியது அவதாரம் என்பது பரம்பொருள் தன்மையிலிருந்து இறங்கி வருவது. ''பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின் மேல் அன்று கண்துயின்றான்'' திருமால். இது கிருஷ்ணவதார நிகழ்ச்சி.

மூவருள் ஒருவனை முதல்வன் என்று வைஷ்ணவர்கள் திருமாலைச் சொல்வதுண்டு. பரம்பொருளாகிய மஹாவிஷ்ணு திரிமூர்த்திகளுள் ஒருவன் என்றால் வைஷ்ணவர்கள் சரி என்று ஒப்புக் கொள்வார்கள். ஆனால் ''பரம்பொருளாகிய பரம சிவன் திரிமூர்த்திகளுள் ஒருவன்'' என்றால் சித்தாந்திகள் சண்டைக்கு வந்து விடுவார்கள். பரமசிவன் வேறு; திரிமூர்த்திகளுள் ஒருவனாகிய சிவன் வேறு என்பது சைவர்களின் நம்பிக்கை.

காளமேகம் ஒரு சிந்தனையை வைக்கிறான். திருமால் அவதாரம் எடுத்து வந்த போதெல்லாம் சிவன் அவதரிக்கவில்லையல்லவா? உலகியல் வார்த்தையில் சொல்வதென்றால் 'மேலேயே இருந்தான்', அல்லவா? அது அப்படி இருக்கத் திருமாலை யானை என்று எப்படிச் சொல்வது? நிறைய உண்பவர்களை யானை என்று சொல்லலாம்; அதீத பசியை ''யானைத்தீப்பசி'' என்பது வழக்கமே. ஏழுலகையும் 'உண்ட திருமாலை, யானை என்று சொல்லலாம்; நிறத்தாலும் ஒப்புமை உண்டு. மேலே இருந்து தன் கடமையைச் செய்யும் சிவனை - அவதாரம் எடுத்துள்ள திருமாலின் பொறுப்பையும் தானேற்று நடத்தும் சிவனைப் ''பாகன்'' என்று சொல்லலாம். பெண்ணைப் பாகத்தில் வைத்ததினால் அவனைப் பாகன் என்பதும் ஏற்கனவே உள்ளதுதான். இக்காரணங்களால்,

பரும்கவளம் யானை,கொளப் பாகன் அதன்மீதே
இருந்தபடி ஈசன்இருந் தான்

என்றான், கோணல் கேள்விக்கு வேடிக்கையால் பதில் சொன்னதாகவும் ஆயிற்று: தத்துவ விளக்கம் செய்து சமரசத்தை நாட்டியதாகவும் ஆயிற்று.

காளமேகத்தின் சமயப் பாடல்கள் எல்லாவற்றிலும் இப்படியான சமரசம் உள்ளார்த்தமாகப் பொதிந்து கிடப்பதை உலகம் ஏன் புரிந்துக்கொள்ள மறுக்கிறது? எடுத்துச் சொல்ல யாராவது முன் வந்தாலும் எதற்காக என்னும் பாணியில் கேட்கமாட்டேன் என்று ஏன் அடம்பிடிக்கிறது?

''செருப்புக்கு வீரரைச் சென்றழிக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகியைப் புல்ல - மருப்புக்குத்
தண்தேன் அளிக்கும் திருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்குமா றே''

செருப்பு என்று தொடக்கி விளக்குமாறு என்று முடிந்த முருகனைப் பற்றிய பாடலும் இதுபோன்ற ஆசு கவிதைகளும் காளமேகத்தின் இரண்டாம் பக்கமாகிய வின்யாச தாகத்தின் விளைவுகள். இந்தத் தமிழ் ஜாலங்கள் ஒரு மகிழ்ச்சியைத் தருவது உண்மை. இந்தக் காள மேகத்தின் வின்யாச தாகம் அடங்கித்தானிருக்க வேண்டும்.

கடைசிப் பக்கத்தில் அவனுக்கு ஒரு தொடர்ந்த தாகம் வந்தது அது சரமாக விக்கல்களை வெளியிட்ட சமரச் தாகம் அது சைவ வைணவ பேதம் ஒழிக்க விக்கியது. அதற்கு என்ன நீர் தர வேண்டும் என்று உலகம் முடிவு செய்யாமல் விட்டுவிட்டது.

ஆயனுக்குக் கண்மூன்றும் ஆதிசிவனுக் கிருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுவாம் - நேயமுடன்
சங்கரர்க்குச் சங்காழி தான்மாலுக் காலமாம்
மங்கைஇடத் தார்க்காடும் மான்

என்று சிவனுக்குரியவற்றைத் திருமாலுக்கும் திருமாலுக்குரிய வற்றைச் சிவனுக்கும் வைத்துப் பாடிய பாடலை மொழிமாற்றுப் பொருள்கோள் என்றுகூறி மயங்கியது. விஷ்ணு முதற்கடவுள் அல்ல என்று அவன் பாடியதாகவும் ''முப்புரம் எரித்தானைச் சுமந்தலுத்த மாடு'' என்று திருமாலைக் கேலி பேசிப் பாடியதாகவும் அப்பாடல் களின் உண்மைப் பொருள் உணராது உலகம் விமரிசித்தது.

கவி உளம் காணவில்லை; அவன் தாகம், தாகமாகவே நின்று விட்டது.

மேகம் விக்கியது; தொடர்ச்சியாக. கவிதை நீராலேயே விக்கியது .

கடவுளாலும் காப்பாற்ற முடியவில்லை .

# சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்

நா. மாதவி. M. A., B. Ed.

**சொக்கநாத வெண்பா:**

இந்நூல் தனது ஆன்மார்த்த மூர்த்தியான சொக்கலிங்கக் கடவுளை மிக்க அன்புடன் உருகிவேண்டிப் பாடப்பெற்ற நூற்றொரு வெண்பாக்களையுடையது. ஆசிரியர் யாப்பு முறையில் வெண்பா, அகவல், கலிப்பா என வகைக்கு ஒன்றாகச் செய்துள்ளதில் இஃது முதலிடம் பெறுகிறது. 'வெண்பா' எனப் பெயர் கொண்டு விளங்கும் நூல்களுள் இதுவும் ஒன்று. (நளவெண்பா, கந்தர்கலிவெண்பா எண்பத்தெட்டு பாடல்கள் 'சொக்கநாதா' என முடிந்துள்ளன) முதற்பாடல் 'ஆடரவம் சூழ்' எனத் தொடங்கி இறுதிப்பாடல் சொக்கே நின்றாளே துணை' என முடிவு பெற்றுள்ளது. இவற்றை இணைத்துப் பார்த்தால் இறைவன்மீது கொண்ட அளவற்ற அன்புப் பெருக்கால் இறுதிவரையில் மறவாது வழிபட்டமை தெரிகிறது. மேலும் இந்நூல்கள் நிலையாமை, மறவாமை முதலிய வாழ்வியல் கருத்துக்களையும், ஊழ், மெய்யுணர்தல் பற்றிய ஆளுமையும், அவன் செயல் என்றுணரும் மனப் பக்குவமும், புராணக்குறிப்புக்களும், சித்தாந்த உண்மைகளும், தத்துவக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

**ஆசிரியர் வரலாறு**

சங்கத்தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த சைவவேளாளர் குலத்தில் சிவபக்தியில் சிறந்த சுப்ர மணியப் பிள்ளை என்பவருக்கும் மீனாட்சியம்மையாருக்கும் முன்செய் தவப்பயனால் சோமவாரத் தினத்தன்று 'ஞானசம்பந்தர்' அவதரித் தார். தமது பதினாறும் ஆண்டிற்குள் தமிழ்மொழி வடமொழி

இரண்டிலும் வல்லுநரானார். ஒருநாள் ஞானசம்பந்தரின் பெற்றோர்கள் சோமசுந்தரக்கடவுளை வழிபட மதுரை செல்லும் பொழுது ஞானசம்பந்தரையும் அழைத்துச்சென்றனர். அங்கு வழிபாடாற்றித் தங்களூர் திரும்புதற்கு ஞானசம்பந்தரை அழைக்க அவர் எனது உயிருக்குத் தாய் தந்தையாக விளங்கும் இறைவனைப் பிரியேன் எனக்கூற அவரை விட்டு விட்டுப் பெற்றோர் ஊர்திரும்பினர்.

பின் சம்பந்தர் பன்னாள் ஆலவாயனைத் துதித்துவருகையில் சிவபூசனை செய்ய விரும்பினார். ஒரு நாள் இறைவனிடத்து முறையிட இறைவன் அவர்கனவில் தோன்றி 'சிவலிங்கரூபமாய்ப் பெட்டகத்தோடு பொற்றாமரைப் பொய்கையின் ஈசான மூலையில் இருக்கின்றோம்! அதனை எடுத்துப் பூசிப்பாயாக' என்று அருளி மறைந்தார். அடுத்தநாள் வைகறைப் பொழுதில் பொற்றாமரையில் மூழ்கிகையில் சொக்கலிங்கப் பெருமானை அணைத்தெடுத்துக் களிப்புமீக்கூற, சண்ணுச்சினிய பொருளாகியே என் கரத்தில் வந்தாய்' என்ற சொக்கநாதக் கலித்துறையைப் பாடிச் சிவலிங்கத்தை வழிபட்டு உய்தற்கு ஞானாசாரியரைக் காட்டி அருள்புரிதல் வேண்டும் என வேண்டித் தம்இருப்பிடம் சேர்ந்தார். அன்று இரவு கனவில் மதி சூடிய பெம்மான் 'ஞானசம்பந்தா திருவாரூரில் ஞானப்பிரகாசனிடத்தில் ஞான உபதேசம் பெற்று நம்மை வழிபட்டு வருவாயாக' என்று அருளிச் செய்தார். அவ்வாறே ஞானபிரகாசர் கனவிலும் தோன்றி 'சோமவாரத் தினத்தன்று உன்மாட்டு வருகின்ற நமது ஞானசம்பந்தனுக்கு விதிப்படி ஞானோபதேசஞ் செய்து சிவலிங்கபூசையும் எழுந்தருளப் பண்ணி வைப்பாயாக' எனக்கட்டளையிட்டுக் கரந்தருளினார்.

ஞானபிரகாசர் தெட்சிணாமூர்த்தி சந்நிதியில் வீற்றிருந்து ஞானசம்பந்தரை எதிர்பார்த்திருந்தார். ஞானசம்பந்தர் மதுரை ஆலவாய்க்கடவுளை வழிபட்டுப் பலதிருத்தலங்களையும்தரிசித்துத்திருவாரூர் அடைந்து ஞான ஞாயிறென வீற்றிருக்கும் குருநாதர் திருவடி மலரில் வீழ்ந்து வணங்கினார். பின் ஞானதீக்கை செய்து சிவஞானோபதேசமும், சொக்கலிங்கபூசையும் எழுந்தருளச் செய்து கொடுத்தருளினார். சொக்கலிங்கப் பெருமான் மேல் சொக்கநாத வெண்பாவும், தன் குருநாதர்மேல் ஞானபிரகாசமாலை எனும் பனுவலையும் பாடியருளினார். பின் குருநாதர் அருளொளி வழங்கி உபதேசிக்கும் தன்மை ஞானசம்பந்தருக்கு ஏற்பட்டதை அறிந்து தருமபுரத்திற்கு அனுப்பிவைத்தார்.

இவ்விதம் பலநாள் அரன்பணி, அறப்பணி ஆற்றிப் பலசீடர்க

ளுக்கும் ஞானோபதேசம் செய்து வைகாசி அபரபக்கசப்தமி தினத்திலே சிவசமாதி கூடினர்.

**ஆசிரியர் காலம்:**

ஞானசம்பந்தர துகுருவான கமலைஞானப் பிரகாசரைப் பற்றித் தஞ்சையை யாண்ட கிருஷ்ண தேவராயர் பெண்வயிற்றுப் பேரனை கிருஷ்ண மகாராசையன் ஆணைப்படி வெட்டுவித்த கல்வெட்டொன்றில் 'சிக்கல் வடகுடி ஓடாச்சேரி முதலிய தேவதானங்களுக்குத் திருவாரூர் ஞானபிரகாச பண்டாரத்தைக் கணக்கு எழுதும் பரதேசி முத்திரையும் அடைத்துக் கொள்ளும்படிக்கு உத்தரமளிக்கிறது' எனத் தெரிவிக்கிறது. இச்சாசனகாலம் கி. பி 1561 மேலும் கமலை ஞானப்பிரகாசரியற்றிய மழுவாடிப் புராணத்துச் செய்யுளொன்றில்

'தழுவிய கலியுகஞ்சேர் சகாத்தமாயிரத்து நானூற்
றுழிதரு மெண்பத் தெழாண்டொழிந்த பின்குரோதனண்டின்
மொழிதரு மாசித் திங்கண் முற்பக்க முதனாள் தன்னின்
மழுவையம் புராணந்தன்னை வகுத்தனன் தமிழினாலே'

எனச் சாலிவாகன சகாப்தம் 1488 என்று தெரிவிக்கிறது

இவ்விரு ஆதாரங்களாலும் ஞானசம்பந்தர் காலம் 385 ஆண்டுகட்கு முன்னர் அதாவது 16 ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

**ஆசிரியரின் அருந் தொண்டுகள்:**

ஞானசம்பந்தர் இறைப்பற்றுடன் குருப்பற்றும் மிக்கிருந்தார். குருவே தெய்வமாகக் கொண்டவர், எனவே தமது நூல்களில் குரு வணக்கமே இடம் பெற்றுள்ளது. சிவனும் குருவும் ஒன்றுதலின் இங்ஙனம் அமைத்தார் போலும் இவரது அருந் தொண்டுகளில் குறிப்பிடத்தக்கன:

1. தருமபுரீசுவரருக்குச் சிவாலயத் திருப்பணி, திருவிழா முதலியவற்றை நடத்தி வைத்தார்.

2. இவரது ஞான நாட்டத்தால் ஆவும், புலியும் தம்முள் மாறின்றி ஒரே குளத்தில் நீர்பருகி ஒரே பொழிலில் களித்து விளையாடும் படி 'ஞான அரசு' செலுத்தினர்.

3. சைவ சமயம் மேன்மேலும் வளரப்பல சீடர்களை உருவாக்கி அருள் நூல் பலவற்றையும் அளித்தருளினர்.

4. அடியவர்களுக்கு இறைவன் திருவருளை விளக்கப் பற்பல அற்புதங்களைச் செய்தார்.

**ஆசிரியரின் அரிய நூல்கள்:**

ஞானசம்பந்தர் இயற்றிய நூல்கள் எட்டாகும். அவையாவன

1. சொக்கநாதக் கலித்துறை — 11 பாடல்கள்
2. சிவபோக சாரம் — 143 ,,
3. சொக்கநாத வெண்பா — 101 ,,
4. முத்தி நிச்சயம் —22 ,,
5. திரிபதார்த்த ரூபாதிதசகாரிய அகவல் — 136 அடிகள்
6. சோடசகலாப் பிராசாத சட்கம் — 6 பாடல்கள்
7. பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப் பிரகாச மாலை — 36
8. நவரத்நமாலை 9 — பாடல்கள்

சிவலிங்கத் திருமேனி கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியால் முதற் கண் சொக்கநாதக் கலித்துறையை ஆக்கியருளினர். தனது குரு நாதர்மேல் பண்டாரக் கலித்துறை எனும் நூலையும், தனது ஆன் மார்த்த மூர்த்தியின் மேல் சொக்கநாத வெண்பாவும் இயற்றினர். பின் தமது சிவாநுபவங்களை யெல்லாம் செறித்துச் சிறுநூலாக சிந்தை தெளிவிக்கும் சிவபோகசாரத்தையும், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவலையும் அருளிச்செய்தார். ஆன்மாவிற்கு உளதாகும் ஆனந்தம் இறைவனிடத்திலிருந்து பெற்ற பேறே என்றும் முடிந்த முடிபாக இருபத்திரண்டு வெண்பாக்களாலாகிய முத்தி நிச்சயம் என்னும் அநுபவ ஞானநூலை ஆக்கியருளினர். சைவ சித்தாந்த செந்நெறியில் ஞானத்தை ஒழுங்குறப்பயக்கும் பிரசாதத்தை அறு பாடல்களில் 'சோடசகலாப் பிரசாதசட்கம்' என்னும் பெயரில் நூலை அருளினர் தமது குருவான ஞானபிரகாசசுவாமிகள் சிவசா யுச்சியம் பெற்றபின்னர் அவரது பிரிவாற்றுமையால் துன்பப் பெருக்கால் உருகிப்பாடிய ஒன்பது பாடல்களும் 'நவரத்னமாலை' என்னும் பெயர்கொண்டு திகழ்கின்றன.

**நூல்கள் உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்:**

வாழ்வியல் என்பது இல்லறம், துறவறம் என இருவகைப்படும் இவ்விரு நெறிகளும் வீடு பேறடைதற்கு வாயிலாகும். இல்லறத் தின் வழிவந்த துறவும், அதன்வழி வாராத்துறவும் ஆகிய இரண் டும் ஆசிரியர்க்கு உடன்பாடாகும். 'துறவின்பகுதி' என்பதால் இல்லறத்தின் வழிவராத் துறவினைக்கூறி மற்றுள்ள பகுதிகளால் இல்லறத்தின் வழிவந்த துறவினை விளக்குகிறுர். இவ்விரண்டின் வாயிலாக அறியலாகும் வாழ்வியல் உண்மைகள் நெஞ்சை நெகிழ வைக்கின்றன.

(வளரும்)

உ

சிவ சிவ

# திருச்சிராப்பள்ளியில்

# இன்னிசைத் திருமுறை விழா

[ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு ஸ்ரீ தாயுமானஈசர் நிதி]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

**'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி**

**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

அருளாணையின் வண்ணம் நடத்தப் பெறுவது

அட்சய ஆண்டு ஆவணித்திங்கள் 17 ஆம் நாள் 2-9-87

ஆவணி மூலம் புதன்கிழமை இரவு 8 மணிக்குத்

**தாயுமானவர் சன்னதியில் தொடங்கப்பெறும்**

திருமுறைவாணர்கள் :

1. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்
   **திரு. டி. எம். விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்,**
   திருவாவடுதுறை.

2. கலைமாமணி, தேவார இசைமணி
   **திரு. முத்துக்கந்தசாமி தேசிகர்**
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.

3. தேவார இசைமணி
   **திரு. ப. ராமச்சந்திர ஓதுவார்,** விருத்தாசலம்.

4. இன்னிசை மணி
   **திரு. இ. எம். வேதாசலம்,** சென்னை.

5. சங்கீதபூஷணம் திரு. சாமி. தண்டபாணி தேசிகர்
   சைவ சமயப் பிரசார நிலையம், சென்னை.

6. சென்னை, திரு. ஆர். சிவப்பிரகாசம், பிடில்.

7. சென்னை, திரு. எஸ். ஏ. கோபாலன், வேய்ங்குழல்.

8. தில்லையாடி, திரு. எம். ஆர். மாரியப்பன், மிருதங்கம்.

ஆணைப்படி,

R. V. சுப்பிரமணியம்,

மானேஜர், ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தா தாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரூ. 22 |
| ஆயுள் சந்தா | ரூ. 250 |
| தனிப் பிரதி | ரூ. 2 |

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71959

மயிலாப்பூர் : சென்னை 600 004. 71231

# திருச்சதகமும்
# கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியும்
## அணிநல ஒப்பீடு

B. பாஸ்கரன் M. A, M. Phil.,

**அ. உவமை:**

ஒன்ருேடு மற்ருென்றை ஒப்பிட்டுப் பார்க்கும் மனப்பான்மை எல்லா மக்களிடத்தும் காணப்படுகிறது உவமை காட்டிப் பேசும் வழக்கத்தை யாவரும் மேற்கொள்கின்றனர். உவமைகலவாத பேச்சு உப்பில்லாத சோறுபோலச் சுவையற்றதாகத்தான் இருக்கும் பேச்சில் இடம் பெற்ற உவமைவழக்கு, இலக்கியத்துள்ளே ஆழமாக வேர்விட்டு வளரத் தொடங்கிவிட்டது. செய்யுட்கு ஓர் அழகு தரும் எனப் பாராட்டப்படும் நிலையை அடைந்துவிட்டது. இலக்கியத்துள் மட்டுமின்றிச் சமய நூல்களிலும் கூட உவமைக்குப் பெரிய மதிப்பு உண்டாகியிருக்கிறது. விளங்காதவற்றை விளங்க வைக்க வேண்டி உவமை கையாளப்படும். அம்முறையில் சமயக் கருத்து விளக்கமுருத இடத்தில் அதனை விளங்க வைக்க அடிக்கடி உவமைகள் கையாளப்படுகின்றன. இத்துணைச் செல்வாக்குள்ள உவமையை வைத்துத் திருச்சதகத்தையும், திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியையும் ஓரளவு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இறைவன் எங்கும் உள்ளான். எப்பொருளிலும் கலந்துள்ளான் என்பது சமயக் கோட்பாடு. இதனை "அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்" என்பார் தாயுமானவர். இதனை விளங்க வைப்பதற்காக "எள்ளும் எண்ணெயும் போல்" என்ற உவமையை மாணிக்கவாசகர் காட்டுகின்ருர். "இறைவன் நடுவிலும், கீழேயும், மேலேயும், எப்பொருளிலும் உள்ளான். எங்ஙனமோ எனின் எள்ளுக்குள் உள்ள எண்ணெய் நடுவாலும், கீழ் பாகத்திலும், முன்னேயும் பின்னேயும், உள்ளேயும், வெளியேயுமாக எல்லா இடத்திலுமாகக் கலந்து - பரவி - நிற்பது போலத்தான் எந்தையாய இறைவனும் இருக்கிருன்." என்கிருர் அவர். இதனை,

"நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்றஎந்தையே"

எனும் பாடல் வரிகள் உறுதிப்படுத்தும். இதே சமயக்கருத்தை விளக்கும் பொருட்டு அதிவீரராமரும் இதே உவமையைக் காட்டுகின்றார். எள்ளுக்குள்ளே இருக்கும் எண்ணெய் எங்கும் பரவி மேலுக்கும், கீழுக்கும், நடுவுக்கும் இடையீடு இல்லாதபடி ஒரு தொடர்ச்சியாக நிற்பது போல இறைவனும் உயிர்க்குயிராய் இடையறாதபடி எங்கும் கலந்து நிற்கிறான் எங்கிறார் இதனை,

"எவன் உயிர்க் குயிராய் எள்ளுமெண் ணெயும்போல்
எங்கணும் இடையறு நின்றான்"

எனும் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதிப் பகுதி நிலை நிறுத்தும்.

ஒருவனை நல்லவனாகவோ, தீயவனாகவோ ஆக்குவது அவனுடைய மனந்தான். மனம், விரிவடையாமல் தான் மட்டும் வாழ வேண்டும் என்று எண்ணுமாயின், அது மற்றவர் செயல்களில் இரக்கங் காட்டாது. வலிதாய் உறைந்து நிற்கும். கடினமான அம்மன நிலையைக் குறிக்கக் கல்லை உவமை காட்டுவது தொன்று தொட்ட மரபாகும். அருணகிரிநாதர், இதனை, "நெஞ்சக் கனகல்" என்பார். மணிவாசகர் தமது மனத்தைக் கசிந்துருகாத கல் ஒத்தது, இரும்பு ஒத்தது என்று குறிப்பிடுகின்றார்.

"நெஞ்சம் கல்லாம்"
"இரும்பு கல் மனம் செவி',
"கல்வகை மனத்தேன்"
"இரும்பு நெஞ்சம்"

இவ்வாறு தன் மனத்தைக் கல்போன்றது இரும்பு போன்றது என்று குறிப்பிடும் மாணிக்கவாசகர் "நெஞ்சோடு கூடிக் கண்களும் செவிகளும் கூட கெட்டு விட்டன" என்கிறார். "நெஞ்சம் கல்லாம் கண்ணிணையும் மரமாம்" என்கிறார். இரும்பு மனம், கல் செவி என நிரல் நிறையாகக் கொள்ளும்படிக் குறித்துள்ளார். அதாவது நெஞ்சோடு கூடிக் கண்களும் மரம்போல் ஆகிவிட்டன, உணர்ச்சி யற்றுக் கல்லைப்போல் கடினமாய் விட்டன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதிவீரராமரும் தம்முடைய மனத்தைக் கல் போன்றது என்றும், இளக்கமில்லாதது என்றும் குறிப்பிட்டுள்ளார் இதனை,

''கல் நல மனம்''
''நெஞ்செனும் கருங்கல்''
''கனிவுரு மனம்''

எனத் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியின் பாடல் வரிகளி லிருந்து உணரலாம்.

கல்லான மனம் பின்னர்க் கரைவதும் உண்டு. அடி யார்கள் இறை வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டு அதன் கண் தொடரும் போது மனம் நெகிழுகும், உருகும், கரையும். இப்படி உருகும் நிலைக்கு மாணிக்கவாசகர் மெழுகை உவமை காட்டி யுள்ளார். மெழுகும் நெருப்பை அணுகும் போது உருகி நீராகி விடுவது போல, நெஞ்சமும் உருகிவிடும். இத்தயை மன உருக்கம் தனக்கு ஏற்பட்டதாக மணிவாசகர் குறிக்கவில்லை. ஏனைய அடி யார்க்கு இத்தகைய உருக்கம் ஏற்பட்டு அவர்கள் இறையருளைப் பெற்றார்கள் என்கிறார். இதற்கு,

''... ... ... ... ... ... அன்பாய்
மனமாய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார்
பொன்னார் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தால்

என்னும் திருச்சதகப் பாடல் வரிகள் சான்று பகரும்.

அதிவீரராமரும் மன உருக்கத்திற்கு இதே உவமையைக் காட்டுகின்றார். இத்தகைய மன உருக்கம் தனக்கு ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். 'கனிவுரு மனம்' என்றும், நெஞ்செனும் கருங்கல்' என்றும் குறித்த அவரே ஒரு இடத்தில் இறைவழி பாட்டின்போது தன்மனம் உலையிலிட்ட மெழுகு உருகுவது போல் உருகிவிட்டது. என்கிறார்.

''விண்ணவர் மகுட கோடிவீழ்ந் திறைஞ்சும்
விரைமலர்ச் சேவடி மிசையே
எண்ணிறை காத லன்புநின் றுருக
உலையிடு மெழுகென உருகிக்
கண்ணில்நீர் வாரக் கருவையம் பரனே!
கடவுளே! என்றெடுத் தேத்தப்
புண்ணியம் புரிந்தேன் இப்பெறும் பேறு
பூதலத் தெவர் பெறு வாரே''

இறைவனது திருவடியைக் குறிப்பிடும் போது அதற்குத் தாமரைப்பூவை உவமை காட்டுவது தொன்றுதொட்டு வரும் மரபு ஆகும். "தாமரை புரையும் காமர் சேவடி" என்க் குறுந்தொகை கூறும். மாணிக்கவாசகர் தம்மை மானிட வடிவத்தில் ஆட்கொள்ள வந்த இறைவனது திருவடியை நேரில் கண்டறிந்தவர். அங்ஙனம் நேரில் சுவைத்த திருவடியை,

"மலர்ப் பாதம்"
"மலர்க் கழல்"
"விரைமலர்த் திருப்பாதம்"
"மலர்த் தாள்"
"தாமரைத் தாள்"
"செம்பொற் பாதம்"
"மலர்க்கமல பாதனே"

எனப் பலவாறு எடுத்தியப்புகின்றார். அதாவது திருவடிகளை மலர் போன்றவை, மணம்மிக்க மலர் போன்றவை - தாமரை மலர் போன்றவை என்று கூறுவதோடு செம்பொன் போன்றவை என்ற மற்றொரு உவமையையும் குறிப்பிடுகின்றார். இந்த உவமை 'பொன்னார் திருவடி" எனத் திருநாவுக்கரசரால் குறிக்கப் பெற்றிருக்கிறது.

அதிவீரராமர் இறைவனது திருவடிக்கு உவமை காட்டும்போது மணிவாசகரைப் போலவே தாமரை மலரையும், பொன்னையும் உவமையாகக் குறிப்பிடுகின்றார். அதிவீரராமர் இறைவனை நேரிற் கண்டவரன்று கனவிற் கண்டவர். கனவிற் கண்ட கோலத்தோடு திருவடிச் சிறப்பை,

"உரகா பரணத் திருமார்பும்
உமையைப் பனையாள் இடப்புறமுஞ்
சிரமா லிகையும் புரிசடையும்
செய்ய வாயும் கரைமிடறும்
வரதா பயமும் மழுமானும்
வயங்கு கரமும் மலரடியும்
கருவா புரியான் வெளிப்படுத்திக்
காட்சி கொடுத்து நின்றானே"

என்னும் செய்யுளில் விவரிக்கிறார். ஈண்டுத் திருவடியை மலரடி என்கிறார்,

தொடரும்

# ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள்

20352

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | கந்தர் கலிவெண்பா (மூலம் மட்டும்) | 0—45 |
| 2 | கந்தர் கலிவெண்பா (கு. சுந்தரமூர்த்தி உரையுடன்) | 1—50 |
| 3 | கந்தர் கலிவெண்பா & சகலகலாவல்லிமாலை (பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்) | 1—50 |
| 4 | மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் | 0—50 |
| 5 | நீதிநெறி விளக்கம் (பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்) | 1—50 |
| 6 | நீதிநெறி விளக்கம் (ஆங்கிலம் இந்தி மொழிபெயர்ப்புடன்) | 1—00 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை | 0—50 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை & முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 1—25 |
| 9 | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | 0—50 |
| 10 | சிதம்பர மும்மணிக்கோவை, செய்யுட்கோவை, தில்லை சிவகாமி அம்மை இரட்டைமணிமாலை | 1—25 |
| 11 | மதுரைக் கலம்பகம் | 0—40 |
| 12 | காசிக் கலம்பகம் | 0—40 |
| 13 | நீதிநெறி விளக்கமும், நன்னெறியும் | 0—15 |

## சாத்திர நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருவுந்தியார் — தெளிவுரையுடன் | 7—25 |
| 2 | திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் [திரு. க. வெள்ளைவாரணனர் விளக்கத்துடன்] | 3—25 |
| 3 | சிவஞானபோதம் — தெளிவுரையுடன் | 10—00 |
| 4 | இருபா இருபஃது — ,, | அச்சில் |
| 5 | உண்மை விளக்கம் — ,, | அச்சில் |
| 6. | உண்மை நெறிவிளக்கம் — தெளிவுரையுடன் | 0—75 |

| | | |
|---|---|---|
| 7. | சிவப்பிரகாசம் — தெளிவுரையுடன் | 2—50 |
| 8. | திருவருட் பயன் — ,, | அச்சில் |
| 9. | கொடிக்கவியும் வினாவெண்பாவும் — ,, | 0—75 |
| 10. | போற்றிப்பஃறொடை — ,, | அச்சில் |
| 11. | நெஞ்சு விடுதூது — ,, | 1—50 |
| 12. | சங்கற்ப நிராகரணம் — ,, | 5—00 |

## பன்னிரு திருமுறை

| | | |
|---|---|---|
| 1. | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (1,2,3, ஆம் திருமுறைகள்) | அச்சில் |
| 2. | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (4,5,6 ஆம் திருமுறைகள்) | 15—00 |
| 3. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (7 ஆம் திருமுறை) | 7—00 |
| 4. | திருவாசகம் (8 ஆம் திருமுறை) | 10—00 |
| 5. | திருவிசைப்பா - திருப்பல்லாண்டு "(9)" ஆம் திருமுறை) (தெளிவுரையுடன்) | 7—00 |
| 6. | பெரிய புராணம் (12 ஆம் திருமுறை) | 12—00 |

## புராணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கந்தபுராணம் மூலம் (மூன்று தொகுதிகள்) | 65—00 |
| 2. | பெரியபுராணம் மூலம் | 12—00 |
| 3. | திருவிளையாடற் புராணம் — உரைநடை மூன்று காண்டம் (4-00, 3-50, 3-50) | 11—00 |
| 4. | திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் | 0—75 |

## இதர நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நீதிநெறி விளக்கக் கருத்தரங்கக் கட்டுரைகள் | 3—00 |
| 2. | செந்திலாண்டவன் திருமுறைத்திரட்டு | 0—20 |
| . | அகத்தியர் தேவாரத்திரட்டு | 6—00 |
| 4. | கயிலைமாமுனிவர் தேவாரத்திரட்டு | 3—00 |
| 5. | தலத்துக்கொரு தேவாரம் - (தா. ம. வெ.) (காவிரியின் வடகரைத் தலங்கள்) | 3—00 |
| 6. | தேவாரம் பாடியவாறு அட்டவணை (தா. ம. வெள்ளைவாரணம் - தொகுப்பு) | 2—00 |
| 7. | பழமொழித் திருமுறை | 0—25 |
| 8 | ஸ்ரீவசனம் | 0—10 |

| | | |
|---|---|---|
| 9 | திருக்கயிலைத் திருமுறை | 0—35 |
| 10 | தாழைத் திருமுறை | 0—15 |
| 11 | தோடுடைய செவியன் | 0—15 |
| 12 | திருவாசகம் தேனும் கனியும் | 0—15 |
| 13 | திருவிசைப்பா தேனும் கனியும் | 0—15 |
| 14 | திருஆணைத் திருமுறை உருத்திராக்கவிதானம் | 0—20 |
| 15 | தேவாரம் பாடும் பயன் | 0—75 |
| 16 | முதுமொழிமேல் வைப்பு | 0—80 |
| 17 | மங்கலம் | 0—20 |
| 18 | திருமுருகாற்றுப்படை | 0—30 |
| 19 | கந்தர் அலங்காரம் | 0—30 |
| 20 | கந்தசஷ்டி கவசம் | 0—20 |
| 21 | கந்தர் அநுபூதி | 0—20 |
| 22 | விநாயகர் திருஅகவல்(நக்கீரர்) | |
| 23 | நால்வர் நான்மணிமாலை (விருத்தியுரை) | 3—50 |
| 24 | அபிராமி அந்தாதி | 1—25 |
| | (திரு. தா. ம. வெள்ளைவாரணம் எழுதிய மொழிப்புரையுடன்) | |
| 25 | திண்ணபுர அந்தாதி | 5—00 |
| 26 | கீழ்வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ் | 4—00 |
| 27 | கோளறு பதிகம் | 0—20 |
| 28 | திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால் | 7—50 |
| 29 | திருக்குறள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) | 15—00 |
| 30 | திருவாசகம் (ஆங்கில மொழிபெயர்ப்பு) | 15—00 |
| 31 | Hymns & Proverbs | 0—30 |
| 32 | Life and works of Kumaragurupara Swamigal | 1—50 |
| 33 | Peeps in to the cultural Heritage of Hinduism (M. Arunachalam) | 25—00 |
| 34 | தொல்காப்பியம் - நன்னூல் (திரு. க. வெள்ளைவாரணனார்) | 10—00 |
| 35 | திருக்குறள் இந்தி மொழிபெயர்ப்புடன் | |
| | அறத்துப்பால் | 1—50 |
| | பொருட்பால் | 2—50 |
| | காமத்துப்பால் | 1—75 |

# நூல்நிறை

## 1. திருச்செந்திற் கலம்பகம்

[ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அருளியது. உரையாசிரியர் சிவ ஸ்ரீ வீ. பரமசிவன்பிள்ளை எம்.ஏ., எல்.டி., பக்கம். 18+96 வெளியீடு சைவசித்தாந்த சபை, சங்கரன் கோயில்.]

சிவ ஸ்ரீ எஸ், கே. எஸ். நடராஜ முதலியார் அவர்கள் நினைவு மலராக வெளியிடப்பெற்றது.

'முருகனடிக்கு அன்பு பெறுதவர் உலகில் பிறவிதீரார்' (4) என்பன போன்ற தொடர்களால் இந்நூலாசிரியர் முருகனைப்பரம் பொருளாகக் கொண்டமை புலப்படும். இக்கலம்பகத்தில் தமிழின் பாடல் வகைகட்கு மிக்க உதாரணங்கள் இருப்பது குறிக்கத்தக்கது. கலம்பகத்துட் பல்வகை உறுப்புகளும், பல்வகைப்பாக்களும் விரவல் இயற்கை எனினும் பாவகைகளை நிறையக் கையாண்டிருப்பது ஒரு சிறப்பாகும். தெய்வீகக் கற்பனைகள் உணர்வுகள் உணர்ச்சிக்கட்கு முதலிடம் தந்த பிரபந்தம் என்றும் இதனைக்குறிப்பிடலாம். செந்தில் என்றால் ஸ்ரீ குமரகுருபரர் ஊமை நீங்கப் பெற்றுக் கந்தர் கலி வெண்பாப்பாடிய அருள் வரலாறு நினைவுக்கு வரும். இதனை இக் கலம்பகத்துக்காண இல்லாமை யாதுகாரணத்தால் என விளங்கிக் கொள்ள இயலவில்லை.

தகுதியான நூலுக்கு உரைகண்ட அறிஞர் மிகுந்த பாராட்டுக் குரியவர். பல உரைகள் வந்த நூலுக்கே மேலும் உரையெழுதுதல் பாராட்ட உரியதன்று. ஆனால் இதுபோன்ற உரைவராத நூல்கட்கு முதலுரை செய்பவர்களை எவ்வளவு பாராட்டினும் தகும். எளிய நடையில் இலக்கணக் குறிப்புக்களுடன் விளக்கவுரையையும் திரு. வீ பரமசிவம் பிள்ளை இயற்றியுள்ளார்.

விலை குறிப்பிடப் பெறுமையால் கடிதத் தொடர்பு கொள்வோருக்கு இலவசமாக அனுப்புவார்கள் என்று கருதலாம்.

சங்கரன்கோயில் சைவசித்தாந்த சபையின் சேவை, மிகச் சிறந்த சேவையாகும்.

## 2 காசியாத்திரை

[ஆசிரியர்: ரா. வீழிநாதன்: பக்கங்கள் 20+187 ஆர்ட்தாளில் வண்ணப் படங்கள் 9 பதிப்பு: பாரத்வாஜ் பப்ளிகேஷன்ஸ். வாரணஸி விலை ரூ 25]

திரு. ரா. வீழிநாதன் அவர்கள் மிகச்சிறந்த எழுத்தாளர், பத்திரிக்கையாளர், மொழிபெயர்ப்பாளர். சிறந்த ஒருவரின் தெளிவான முயற்சியால்தான் தரமான படையல்கள் வெளிவரும் என்பதற்கு இந்தக்காசி யாத்திரை நூல் ஒருநல்ல எடுத்துக் காட்டாகவுள்ளது.

எட்டாண்டுகளாக அமர பாரதி என்னும் அரிய ஆத்திக இதழை நடத்திவரும் திரு. ரா. வீழிநாதன் அவர்கள் வாரணஸி திரு. வி. எஸ். செல்லம்ஐயர் அவர்களின் தூண்டுதலாலும், வேண்டுதலாலும் இந்நூலை — இந்த வசன இலக்கியத்தைப் படைத்திருக்கிறார். தமிழகத்தில் இந்நூல் கிடைக்கும் முகவரி நூலில் குறிக்கப் பெறவில்லைஎன்றாலும்,

திரு. ரா. வீழிநாதன்
ஆசிரியர் அமரபாரதி
12, கிழக்குத் தெரு,
மேற்கு சி. ஐ. டி நகர்
சென்னை 600 035

என்ற முகவரிக்கு நூலின்விலை ரூ 25 பதிவஞ்சல் கட்டணம் ரூ 5-40 ஆக 30-40 ஐப் பணவிடைமூலம் அனுப்பி நூலைப்பெறலாம் நூலைப்பெற்றவர்கள்தாம் அதிஷ்டசாலிகள் என்பதை நூல்முழுவதையும் படித்தபிறகு உணரமுடியும்.

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் ஸ்ரீ முகத்துடன் நூல் தொடங்குகிறது. ஸ்ரீ பெரிய பெரியவர்களின் தீர்த்தங்கள், தீர்க்கும் கடன்கள் என்னும் தத்துவ விளக்கக் கட்டுரை நூலை அலங்கரிக்கிறது. காசி யாத்திரை ராமேஸ்வரத்தில் தொடங்குவது. அவ்வண்ணமே நூலும் ராமேஸ்வர மகிமையில் தொடங்குகிறது. 1 ராமேஸ்வரம் 2 பிரயாகை 3 காசி 4 கயை 5 ஸ்தோத்திரங்கள் எனநூல்பகுக்கப் பெற்றுள்ளது.

இதுவரை காசியாத்திரைபற்றிவந்த எந்தஒருநூலும் சுற்றுலா நூலாகவே அமைந்தது. இந்நூல் ஆதாரபூர்வமான தத்துவ விளக்கங்கள் சுயசிந்தனையுடன் கூடிய ஆய்வுமுடிவுகள் முதலியனகொண்டுள்ளமை மகிழ்வையும் நிறைவையும் தருகிறது.

ஒருமைப்பாட்டுநூல் என்பதாலும், சுற்றுலாநூல் என்பதாலும் தத்துவவிளக்கநூல் என்பதாலும், பக்திவிளக்கநூல் என்பதாலும்

மாநில மைய அரசுகள் நூற்பதிப்பு ஊக்கப்பரிசுகளை இந்நூலுக்கு வழங்கவேண்டும்.

சரஸ்வதி அந்தர் வாகினியாக ஓடுவது பற்றி எழும் சந்தேகத்தை வேணிமாதவன் கூறுவதாகப் பெண்ணின் கூந்தலைவைத்து விளக்கும்விதம் ஒரு சிறுகதை படிப்பதுபோல இருக்கிறது. ரா. வீ அவர்களிடம் நாமெதிர்பார்க்கும் வடமொழிப் பாடல்களுக்கான மொழிபெயர்ப்பு இன்பத்திற்கு நிறையத் தீனி கிடைக்கிறது.

ராமநாதஅஷ்டகம், ஸ்ரீ பர்வதவர்த்தனி அஷ்டகம், ஸ்ரீ விஸ்வநாதஅஷ்டகம், ஸ்ரீ அன்னபூர்ணஷ்டகம், கங்காஷ்டகம், மணிகர்ணிகாஷ்டகம், காலபைரவாஷ்டகம், ஆகியன சமஸ்கிருத எழுத்துக்களில் மட்டுமன்றித் தமிழெழுத்துக்களிலும் பிரசுரிக்கப் பெற்றுள்ளன.

பாரத்வாஜ சுப்ரமண்ய ஐயர் அவர்களின் 'ருத்திராக்ஷமஹிமை' என்னும் கட்டுரையும் அரியபல கருத்துக்களைக் கொண்டதே.

திரு. ரா. வீழிநாதன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ம. வே. பசுபதி

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

**ரத்த சோகை நீங்க**

இரவு நேரங்களில் பாலும் பழமும் சாப்பிடுவது நல்லது. பகலில் ஏதாவது ஒரு கீரையையும் சேர்த்துக் கொள்வது நன்று.

**வாய்வு - இடுப்புவலி ஏற்படும் போது**

வாரத்திற்கு ஒருமுறை ஆதி நாராயண கீரையும் இருமுறை மூக்கரட்டை கீரையும் நான்கு முறை முருங்கைக் கீரையும் உணவுடன் சேர்த்துவர வாய்வு வலிகள் நீங்கும்.

**சூட்டைத் தணித்துப் பித்தத்தைப் போக்க**

திராட்சை உடலுக்குக் குளிர்ச்சியானது. சூட்டைத் தணிக்கும் பித்தத்தைப் போக்கும் ரத்தத்தைப் பெருக்கி மேனிக்கு ஒளியூட்டும் இரும்பு, செம்பு உயிர்ச்சத்துகள் மிகுந்துள்ளது.

**மெலிந்தவர்கள் சதை பிடிக்க வழி**

சாம்பல் பூசனிக்காயை வாரம் 4 நாள் சமையலில் சேர்த்துக் கொண்டு வெண் பூசனி லேகியம் சாப்பிடவும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

# ஞானமிர்தம்

தொடர்ச்சி

## பதி நிச்சயம்

### உயிர்கட்குப் பற்றுவது பரமன் சீர்பாதம்

53 திருவின் செல்வி ஒருதனிக் கொழுந
புலமை சான்ற கலைமகள் கணவ
வீரிய மடந்தை பேரிசைக் கிழவ
தவத்தின் தலைவ தருமத் துறைவ
அருளோன் அருளோன் என்ப நீயே
அருளோன் ஆவதை எவனோ தெருளக்
கண்ணில் காணா ராயினும் கனவின்
நண்ணுங் காலை நல்லுயிர் செகுக்கும்
பேயே யாயினும் பிரியி னின்பம்
வாயாது என்றே மதியோர் அறைப
மரீஇ நாளும்நின் னன்றி யாரும்
அறிய வாராப் பெரும என்னை
அன்ன தாய தொன்முது பிறவி
அறைபோக்கு ஒழியக் குலமுழுதும் வளைஇ
ஞான ஒள்வாள் பூகமும் அழுந்தக்
கொன்றுசினந் தணியாது அன்றிய சீற்றத்து
மறவனை யல்லையோ மற்றே இறைவ
எவன்பல மொழிகுவம் யாமே வனச
நீர்நிலை நின்று தாள்நிலம் பெற்ற
தாளோய் நின்தாள் நிழலம் யாங்என்று
இரந்துகுறை யுறினும் பிறந்தை யெந்திறம்
மறந்து நோக்காது எவன்புகல் எமக்கென
ஒழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை
ஒருவன் பாதம் அல்லதை
பிறிதும் உண்டோ பெறும்புகல் நமக்கே.

இது, பாசச்சேதம் கேட்டுத் தனக்குப் பற்ருய் உள்ளது ஏதென்று சீடன்விண்ணப்பஞ்செய்ய, "ஆசாரியன் நமக்குப் புகலிடமாயுள்ளது அகண்ட பரிபூரணமாய் நிறைந்த நிரஞ்சனதேவ நாயகனுடைய சீர்பாத மல்லது வேறுண்டோ" ? என்று அருளிச்செய்தது.

இ-ள் சருவஞ்ஞத்துவமான செல்வத்தையுடையனுகையால் சிவபோகமாகிய செல்விக்கு ஓர் ஒப்பற்ற நாயகனே யென்றும் கலைஞானமாகிய அபரஞானம் முற்று முணர்தலால் அறிவுடைமையாகிய வாகீசுவரிக்குப் பர்த்தாவாயுள்ளோனே யென்றும் பஞ்சேந்திரிய நிக்கிரகம் பண்ணினபடியால் வீரமாகிய மாதுக்குப் பெரிய கீர்த்தியையுடைய நாயகனே யென்றும் சருவசங்க நிவர்த்தியுடைமையால் தவமாகிய செல்விக்கு நாயகனே என்றும் செனனமரண சாகரத்தில் அழுந்துவோரை எடுத்துக் கரைசேர்க்கும் முறைமையால் தருமத்துக்கு இடமாயுள்ளவனே என்றும் கிருபையை மிகவும் உடையவனே என்றும் நின்னைச் சொல்லாநிற்பர் நீ கிருபையை யுடையையானது எவ்வண்ணம்? அல்லாமலும் இன்ன தன்மைத்தாய் இருக்கும் எனக் கண்ணுலே தெளியக் காணவேண்டும் என்னினும் புலப்படாததாய்க் கேட்டப்படியே கனவிலே கண்ட காலத்தும் நல்லவுயிரைப் போக்கும் பேய் யாளுலும் கூடியிருந்து பிரிந்தால் இன்ப மன்றித் துன்பத்தைக் கொடுக்குமென்று அறிவுடையோர் சொல்லியிருக்கின்றனர் சொல்லியிருப்பவும் மகாத்துமாவே! என்னை அனுதி தொட்டு வேறுபாடற இந்நாள் வரை மருவியும் நின்னை யொழிய யாவர்க்கும் அரிதற்கரிதாகிய அத்தன்மைத்தான பிறவியை நூல்களிலே சொல்லப்பட்ட உற்பிசம் அண்டசம் சராயுசம் சுவேதசம் என்னும் நான்கு வருக்கத்தின் தோற்ற முழுதையும் ஒதுக்கமற வளைத்துக்கொண்டு ஞானமாகிய அழகியவாள் பொலிவுபொருந்திய புகர்முகங் குளிக்கக் கொன்றும் மற்றும் பாசச்சேதம் பண்ணப் பக்குவராயினுரைத் தேடிக் கோபம் தணியாதேயிருக்கும் மாறுபட்ட மாற்சரியத்தையுடைய மறவனல்லையோ கர்த்தாவே நாங்கள் தேவரீரைப் பலவாகச் சொல்லுவோம் அஃது எவ்வண்ணம் தாமரையானது நீரிலே ஒற்றைக் காலினுலே நிலையாக நின்று தவசுபண்ணி நின்னுடைய சீர்பாதத்தினுடைய அழகைப்பெற்ற அச்சீர்பாதத்தையுடையோனே நின் சீர்பாத ஆசிரயராயிருந்தோம் நாங்கள் எங்களுக்குச் செனனம் வேண்டுமென்று நின்னைக் குறையிரந்து வேண்டிக்கொண்டாலும் அச்செனனமாவது எங்களிடத்து மறந்தும் நோக்காததாய் முடிந்தது எமக்குப் புகலிடம் யாதென்று விண்ணப்பம் செய்ய அனுப்புதைக்கவும் இடமின்றிச் சடசித்துக்களெல்லாம் நிறைந்த இளம்பிறையைத் திருச்சடா

பாரத்திலே யுடையனாகிய உவமனில்லாத பரமேசுவரனுடைய சீர்பாதமல்லது மற்று உனக்கும் நமக்கும் பெரியபுகலிடமுண்டோ என்று ஆசாரியர் அருளினர் எ - று.

ஓ, மற்று, ஏ, அசை.

நு. வி: சர்வஞ்ஞத்துவம் - எல்லாமுடைமை.

## பதி ஞானம்

64 வாழிய பெரும வாழி வாழிய
வன்மீ னணைத் தொன்முது கடவுள்
வலம்படு கொற்றம் தொலைச்சி மீளா
தடங்கருஞ் சீற்றத்து இடங்கெடக் கடக்கும்
மடம்பறி ஞான வாழி உடம்பெரி
வெளியென நில்லாது என்னு மாத்திரம்
தெளிவரத் தெருட்டினை செல்வ அளியேன்
தற்பொரு விறந்த மெய்ப்பரந் தெரியாது
எய்த்தனன் ஆயின் இருவினை இன்று
மொய்த்தன வல்லவோ முனிவ மொய்த்திடை
எய்துவ எனைப்பல வன்றே இத்திறன்
யானிற் கிளத்தல் சாலு மானின்
குளம்புறு குழிவாழ் கலங்கற் சின்னீர்
மகரா லயத்தின் மயக்கறத் தெளித்தலிற்
கவிரா தென்றே கண்பனி தூங்க
மெய்ம்மயிர் பொடித்துத் தன்முதல் கலங்கி
இழந்த நெஞ்சமொடு இறைவன் பாதம்
ஓதினன் வீழ அவனை நோக்கித்
தானுமி யாதும் ஆகாது இவ்வென
ஒண்ணு நீதியன் நீதியால் தனது
தெய்வ நாட்டம் தைவரு மளவைக்

குவிவாய் அமையாக் குடநிறை தீநீர்
பகுவாய் யாமைப் பார்ப்பினேடு அஃதோ
தினகரன் ஒளிசேர் சிலைகால் தீயின்
துரியமும் இறந்த தூயோன் தூய்மை
அருளினன் அருள்பெற்று எழுந்தோற்கு
இளிசேர் தீஞ்சொல் இயம்பினன் இனிதே.

இது "மதிசேர் செஞ்சடை ஒருவன்பாதம்" அடைய ஆசை வைத்த சீடனுக்கு ஆசாரியன் கடாக்ஷித்தமை கூறியது.

இ - ள் மகாத்துமாவே, வாழ்வாயாக, வாழ்வாயாக; வலிய மகரக்கொடியையும் வெற்றியையும் பழமையையும் முடைய காம தேவன் இச்சை பண்ணுவிக்கும் வலிய வெற்றியைக் கெடுத்து ஒழியாதே அடங்குதற்கு அரிதாகிய மாற்சரியத்தை நின் னிடத்தே சிறிதும் இடமில்லாதபடிச் சயிக்கும் அறியாமை நீங்கிய ஞானத்தை யுடையோனே வாழ்வாயாக. ஞானச் செல்வனே வெள்ளிடையிலே ஏற்றிவைத்த விளக்குப்போலச் சரீர மானது நில்லாது என்னும் அந்த வேறுபாட்டை தெளிவுண் டாக அறிவித்தருளினுய். நின்னாலே அனுக்கிரகம் பெற்ற அடி யேன் தனக்கு உவமையில்லாத நித்திய ஞானனந்த சொரூப மான பதியுண்மையை அறியாதே தேகம் விட்டேனுயின் இன்ன மும் பாவபுண்ணியங்கள் என்னைப் பந்தித்தனவாம் அல்லவோ செனனத்துக்குக் காரணமாகிய அவாவறுத்தோனே கன்மங்கள் பந்தித்த விடத்து அடியேனைவந்து கூடுவன எண்ணிறந்த பல வாகிய செனனம் அல்லவோ நின்னுடைய திரு முன்பே அடியேன் இந்த வேறுபாடுகளைச் சொல்லி விண்ணப்பித்த மையும் இது, எத்தைனக்கும் என்னில் மானின் குளம்படி யழுத்தின குழியிலே நின்ற அற்பமான கலங்கல் நீரைக் கொண்டு சமுத்திரத்திலே கலந்துள்ள உவர்ப்பு நுரை முதலாகிய தோடம் முழுதுங் கெடவேண்டும் என்று தெளித்தலை யொக்கும் என்றுகூறிக் கண்ணீர்வாரச் சரீரத்துண்டாகிய உரோமம் புளக மாகித தற்போதம் முழுதும்கலங்கிக் கரைந்த நெஞ்சத்தோடே ஆசாரியன் சிர்பாதங்களிலே தோத்திரம் பண்ணி வீழ்ந்து வணங்க இங்ஙனம் பரிபாகத்துடனே வீழ்ந்த சீடனை அரு ளோடு நோக்கி ஆசாரியன் தானும் கிருபையாலே தன்வசம் இழந்து இன்ன சொரூபமுடையன் என்றும் இன்னபடி இருப் பன் என்றும் சொல்லுதற்கரிய நீதிமானுன பரமசிவனுடைய முறைமையாலே சிவத்துவத்தைப் பாவித்துத் தனது தெய்வீகத் திருநயனத்தாலே கடாக்ஷித்தருளு மளவில், குவிந்த வாயில்லாத ஊமைக் குடத்து இனியநீர் நிறைந்தாற்போலவும் பெரிய வாயினை

யுடைய ஆமையாகிய தாய் பார்க்கக் குஞ்சு வளர்ந்தாற் போலவும் அந்த அதிசய மாத்திரமோ? ஆதித்தன் சந்நிதியிலே சார்ந்த சூரியகாந்தக்கல் தீக்கான்றாற் போலவும் நின்மல துரியாவத்தைக்கும் அப்பாலாகிய நின்மலனுடைய பதியிலக் கணத்தைத் திருவுள்ளம் பற்றினன், இங்ஙனம் அனுக்கிரகத்தைப் பெற்றெழுந்த சீடனுக்கு இனியென்னும் இசையை ஒத்த வசனங்களாலே இனிதாக அப்பதியுண்மையறிதலைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தான், எ - று.

ஏ, அசை. ஓ, வியப்பு.

நு. வி: ஆதித்தன் - கதிரவன், சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்ய, சுடர்தோன்றியிடச் சோதி தோன்றுமா போல், ஆரியனும் ஆசான்வந்து அருளாய் தோன்ற, அடிஞானம் ஆன்மாவில் தோன்றும், தோன்றத், தூரியனும் சிவன்தோன்றும் என்னும் சிவஞானசித்தியாரும்.

## பதி யிலக்கணம்

55 படிஅடி அடங்காக் கடிகமழ் தாமரைக்
கட்காண் கடவுளொடுஅஃ தத்துறை அமலனும்
எண்ண இயல்பினன் இறையென முழங்கும்
விண்ணோர் அண்ணலை வினவின் மண்முதல்
முப்பது முதலா மூவிரண்டு ஓவா
ஒப்பில் தத்துவம் ஓரீஇய திப்பியன்
ஒழிவற நிறைந்த ஒருவன் புழிதீர்
வண்ண மில்லி அமலன் கண்முதல்
புலனெடு புணரான் இணையிலி யான்என்
மதத்தின் வாராப் பிறப்பிலி தனக்கென
நாமம் இல்லோன் நாதன் அனுமயன்
கால காலன் கணக்கிலி கடையும்
மூலமும் நடுவும் முனிந்தோன் மேலோன்
ஆகுலம் இல்லி அகோபன் அமோகன்
அபயன் அபங்கன் அகம்பன் அசஞ்சலன்
நித்தன் முத்தன் சுத்தன் சுதந்தரன்
பந்தமும் வீடும் பறைந்தோன் சிந்தையொடு

இன்பமும் துன்பமும் இகந்தோன் யாவதும்
புலமின் றுணர்ந்த புலவன் கலர்எனத்
தணித்தலும் அளித்தலும் தடிந்தோன் தற்பரன்
துரியமும் தொடராத் தூயோன் பெருமைக்கு
அண்டம் அணுத்தர அணுஅண் டத்துடன்
நின்று நுணங்கித் தண்டாச் சீர்த்தி
உரைதரு புணரிக் கரைகரை அம்பிக்
காட்சி முதலிய அளவையும் அளவறச்
சேட்பட அகன்றனன் சிவன் எனச்
சூழ்ச்சியின் நிறைந்தோர் துணிந்தனர் நெடிதே.

இஃது இளிசேர்தீஞ் சொல்லாக அருளிச்செய்த பதியிலக்கணம் கூறியது.

இ - ள் மூவுலகும் அடங்காத பாதத்தினையும் நறு நாற்றத்தையுடைய தாமரைப்பூவை யொத்த காணும் கண்ணையுமுடையனாகிய திருமாலோடு அத்தாமரைப் பூவிடத்திருக்கும் பிரமாவும் அறிதற்கரிய இயல்பினையுடையான் பதியென்று வேதாகம சாத்திரங்களால் சொல்லப்பட்டவனாகிய தேவர்கட்குக் கருத்தாவாகிய பரமசிவனை ஆராயின் நித்தியமான உவமையில்லாத பிருதுவி தத்துவமுதலாகவுள்ள தத்துவமுப்பத்தாறுக்கும் அதீதனாயிருக்கும் ஆச்சரியத்தையுடையோன். சருவ வியாபகமாய் நிறைந்த ஏகன் குற்றமற்ற பொன்மை நீலாதி வண்ணங்களில் ஒன்றும் இல்லாதோன் நிருமலனாயிருப்போன் கண் முதலாகிய இந்திரியங்களோடு கூடாதவன் தனக்கு உவமையில்லாதவன் யானென்னும் அகங்காரத்தாலே வருவது செனனமாதலால் அவ்வகங்காரமில்லாமையால் செனனம் இல்லாதோன் தனக்கென ஒரு நாமதேயம் இல்லாதவன் சருவ கருத்தாவாய் இருப்போன் ஒன்றிலும் பற்றில்லாமையால் நோயில்லாதோன் திரிகாலங்களுக்கும் காலமாயிருப்போன் அளவுபடாதோன் கடையும் முதலும் நடுவும் இல்லாதோன் சருவதோமுகமாயிருப்போன் கலக்கம் இல்லாதவன் கோபம் இல்லாதவன் மோகம் இல்லாதோன் பயம்இல்லாதோன் பங்கிக்கப் படாதோன் நடுக்கம் இல்லாதோன் சலனம் இல்லாதோன் என்றும் ஒரு படித்தாயிருப்போன் முத்தியை ஈவோன் தோடம் இல்லாதோன் என்றும் தன் வயத்தனாயிருப்போன் பெத்தமும் முத்தியும் இல்லாதோன் சிந்தனையில்லாமையாற் சுகதுக்கம்

இல்லாதோன் புத்தீந்திரியங்களின்றியே சருவபாதார்த்தங்களை யுமறியும் சர்வஞ்ஞன் வினைநுகர் காலம்நோக்காது கீழோர் என்று நிக்கிரகித்தலும் நல்லோர் என்று அனுக்கிரகித்தலும் இல்லாதோன் தானே பரவத்வாயுள்ளோன் நிருமல துரியாவத்தைக்கு அப்பாலாயிருக்குந் தூயோன் அனந்தகோடி அண்டங்கள் எல்லாம் நோக்கத் தன் பெருமைக்கு அவை அணுவாகவும் தன்நுண்மைக்குப் பரமாணுக்கள் அண்டமாகவும் அவற்றுடனாய் நின்று தேய்ந்து நுணுகிய கெடாத சீர்மையையுடையோன் புகழப்பட்ட வேதாகம சாத்திரமாகிய கடலின் கரையை அணைதற்குச் சொல்லுகிற பிரத்தியக்கம் முதலாகவுள்ள சட் பிரமாணமாகிய மரக்கலங்களுக்கும் அளவுபடாமல் தூரமாக அகன்றிருப்போன் பரமசிவன் என்று ஆகம விசாரம் மிக்கோர் மிகவும் அறுதியிட்டனர் எ - று.

ஏ அசை.

நுவல் : படி - உலகு ; ஈண்டு மூவுலகையும் குறித்தது. நிருமலன் - வினையின் நீங்கியோன். திரிகாலம் - இறப்பு நிகழ்வு எதிர்வாகிய முக்காலங்கள். பெத்தம் - கட்டுநிலை ; பிறப்பு இறப்பிறகு உட்பட்ட நிலை. புத்தீந் - திரியங்கள் - புத்தி முதலிய கருவிகள். சர்வஞ்ஞன் - முற்றும் உணர்ந்தோன். " இல்நுழை கதிரின் துன் அணுபபுரையச் சிறியவாகப் பெரியவன் " என வரும் திருவாசகப் பகுதியும் ஈண்டு எண்ணற் குரியதாகும். சட்பிரமாணம் - அறுவகை அளவை. அவைகாண்டல், கருதல், உரை, இன்மை, அருத்தாபத்தி, உவமை என்பன. அருத்தாபத்தி - பொருள்பேறு. அதாவது இங்ஙனம் அன்றாயின் இது கூடாது என்று உணருமது.

## பதியின் வியாபகம்

56 இன்ன தன்மையன் எனையன் என்று இனிது
அன்னோன் தேரின் அம்ம மின்னவிர்
பதும ராகப் புதுவெயில் நிழல்செய்
மதியில் தண்மை ஞெலிகோல் வன்தழல்
மடநடை நல்லான் வனமுலை வந்த
பாலில் தீநெய் பழத்தின் இன்சுவை
பூட்சி ஆருயிர் பொருளுரை எண்ணெய்
கடிமலர் களுலிய ஒடியா வாசம்
விம்மிதம் என்னென்று இசைக்குவ மற்றே
நிலம்நீர் தீகால் வெளிஉயிர் யாவும்

அவையே தானவை தானே யாகி
விரவியும் விரவா வீரம் விரவிய
தன்வாள் அல்லதை தன்வாள் இழந்த
மதிமாசு ஊர ஒளிகால் பளிங்கின்
பூட்சித் தென்னப் புலனொடு புணராது
அருளும் அடிகள் என்றனன்
மருள்கெட விலங்கிய மறைவல் லோனே.

இது காட்சி முதலிய அளவையும் அளவறச் சேட்படவகன்ற பரமசிவனது வியாபகம் கூறியது.

இ-ள் முன்னை அகவலிற் சொல்லப்பட்ட பரமசிவன் எவ் வியல்பாய் நின்ருன் என்று இனிதாக அவனை ஆராயின் கேட்பாயாக விட்டுவிளங்கா நின்ற ஒளியையுடைய மாணிக்கமும் புதிய சோதியும் போலவும் விளக்கத்தைச் செய்யும் சந்திரனும் தட்பமும் போலவும் தீக்கடை கோலும் அதில் வதியும் வலிய தீயும் போலவும் மெத்தென்ற நடையையுடைய நல்ல பசுவின் அழகமைந்த முலையிலுண்டாகிய பாலும் இனியநெய்யும் போலவும் பழமும் இனிய இரதமும் போலவும் உடலும்நிறைந்த உயிரும் போல்வும் சொல்லும் பொருளும் போலவும் எள்ளும் எண்ணெயும் போலவும் அழகிய புட்பமும் அதில் விரவிய கெடாதகந்தமும் போலவும் வியாபித்திருக்கு மதை வியந்து திட்டாந்தம் இவ் வனைத்துமேயோ! வேறே எதை எடுத்துச்சொல்வோம் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் ஆகிய பூதங்களிலும் சருவான் மாக்களிடத்தும் அவையிற்றைத் தான் எனலுமாய்த் தன்னை அவையெனலுமாய் வியாபித்தும் அவையிற்றில் விரவாதிருக்கிற வீரியமும் என்போல என்னில் அடுத்த பொருளின் பொன்மை நீலாதிவண்ணம் காட்டுவதல்லது தன்னொளி தோன்ரு திருக்கின்ற சந்திரனும் களங்கமுடைத்தாதலால் ஒளி குறைந்தது என்னும் படிப் பிரகாசத்தைச் செய்கின்ற பளிங்கினது இயல்பு போல் வதாம் என்று அருளிச்செய்ய மயக்கங் கெட விளங்கிய திவ்வியாகமத்துக்கு அதிகாரியான என் சுவாமி நீர் அருளிச் செய்த பதியின் தன்மை இப்படியானல் எனக்குப் புலப்படா திருந்த அப்பதியை யறியும் உபாயத்தை தம்பிரானே! அடியேனுக்கு அருளிச் செய்யவேண்டும் என்று சீடன் விண்ணப் பஞ் செய்தான் எ-று.

மற்று - வினைமாற்று, ஒடு - அசை, ஏகாரம் - தேற்றம். ஓ - வியப்பு.

## ஆயுள் சந்தா செலுத்தினல்

## ஓர் அன்பளிப்பு

### ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினல்

ரூ. 55 மதிப்புள்ள

**கந்தர் கலிவெண்பா**

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக
அளிக்கப்பெறும்.

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய**
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
**டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்**
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்
தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம்
அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி
இசைத்தட்டைப் பெறலாம்.

பி. ஆ - ர்

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 15-00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். ''ஸ்ரீகுமரகுருபரர்'
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன்,
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Tirupanandal
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை - 600 090.